விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 27 சனிக்கிழமை (11.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 205

## கட்டுக்கடங்காமல் பரவும் கொரோனா

# நாடு மீண்டும் முடக்கப்படலாம்?



## சவேந்திர சில்வா எச்சரிக்கை

(கொழும்பு)

கந்தக்காடு புனர்வாழ்வளிக்கும் மையத்தில் இனி யாருக்காவது கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களுடன் தொடர்புடைய பிரதேசங்கள் முடக்கப்படும். அது சிலவேளை நாடு முழுவதுமான முடக்கமாக அமையலாம் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடையில் மற்றுமொரு கைதிக்கு கொரோனா உறுதி

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள மற்றுமொரு கைதிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் ▷23

## நாகர்கோவிலில் குளவிக் கொட்டு

### 4 பேர் காயம்

(கரணவாய்)

ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்த 4 பேர் குளவிக்கொட்டுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ▷23

## யாழில் 4 குடும்பங்களை சேர்ந்த 14 பேர் உட்பட

### வடக்கில் 28 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேரும் மன்னாரில் 14 பேரும் என வடக்கு மாகாணத்தில் 28 பேர் அவர்களது வீடுகளில் ▷23

## தொற்றாளர்கள் மேலும் உயரும்

### சவேந்திர சில்வா

(கொழும்பு)

பொலநறுவை மாவட்டத்தில் உள்ள கந்தக்காடு மற்றும் சேனபுர புனர்வாழ்வு மத்திய நிலையங்களில் உள்ள 375 பேருக்கான பி.சி.ஆர் ▷23

### கொரோனா அறிகுறிகளுடன்

## சிலாபம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இளைஞன் மரணம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று அறிகுறிகளுடன் சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட ஒருவர் உயிரிழந்துள்ளார் ▷23

சங்குநாதம்
உங்கள்
வலம்புரியில்
நாளை
பிரசுரமாகும்.
வாசிக்கத்
தவறாதீர்கள்.

## தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப்படலாம்?

(கொழும்பு)

பாராளுமன்ற பொதுத் தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப்படலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது.

நாட்டில் மீண்டும் ▷23

## நல்லூர் மஹோற்சவத்தில் 50 பேருக்கே அனுமதி

### மாநகர சபை ஆணையாளர் ஜெயசீலன்

(குப்பிழான்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. ▷23

## கொரோனா வைரஸ் யாழில் பரவும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழில் கொரோனா வைரஸ் மீண்டும் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் நேற்று முதல் அவர்களது வீடுகளில் சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத் ▷23

## நேற்று ஒரே நாளில் மட்டும் 300 பேருக்கு கொரோனா தொற்று

(கொழும்பு)

நேற்று ஒரே நாளில் 300 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதையடுத்து, இலங்கையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2454 ஆக அதிகரித்துள்ளது.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்த 299 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, இலங்கையில் ▷23

## கொரோனா சமூக பரவல் அபாயம்!

(கொழும்பு)

கந்தக்காடு போதைப் பொருள் மறுவாழ்வு நிலையம் ஊடாக ஏற்பட்டுள்ள புதிய வைரஸ் தொற்றாளர்களால் கொரோனா சமூகத் தொற்றாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தொற்றுநோயியல் விஞ்ஞானப்பிரிவு எச்சரித்துள்ளது. (ம-3)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கோவில்களையும் தமிழர்களையும் காப்பாற்ற பிரதமர் மோடி உடனடியாகத் தலையிடவேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்

(வவுனியா)

**இந்துக்கோவில்களையும் தமிழர்களையும் காப்பாற்ற இந்தியப் பிரதமர் மோடி உடனடியாகத் தலையிட வேண்டும் என்று வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.**




அவர்கள் போராட்டம் மேற்கொள்ளும் இடத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள,

பௌத்த அடிப்படைவாதமே காணாமல் ஆக்கப்பட்டதற்கும், அவர்களை கண்டுபிடிப்பதற்கும் தடையாக உள்ளது. இந்துக் கோவில்கள் சிங்கள பௌத்த மத பிக்குகளால் நீண்ட காலமாக ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது.சமீபத்தில், வரலாற்று கோயில்கள் புத்த மதத்திற்கு சொந்தமானவை எனத் தெரிவித்த தேரர்களின் கருத்து எம்மை எல்லாம் அச்சமடையச் செய்துள்ளது.

திருக்கோணேச்சரம் கோவில், இலங்கையில் உள்ள இரண்டு தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று.கிபி 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் இக்கோயிலின் மீது ஒரு பதிகம் பாடியது குறிப்பிடத்தக்கது.

இப்போது சிங்கள பௌத்த பிக்குகள் கிழக்கு மாகாணத்தில் 25 கோயில்கள் புத்த மதத்தைச் சேர்ந்தவை என்று தெரிவித்து புத்த கோவிலைக் கட்டுவதற்கு முயற்சிப்பதாக இந்துக்கள் பயப்படுகிறார்கள். புதிய சிங்கள அரசாங்கம் ஒரு குழுவை உருவாக்கி, கிழக்கு மாகாண தொல்பொருள் பாரம்பரியத்தை பாதுகாத்தல் என்று கூறி, இந்துக் கோவில்களை கைப்பற்ற முயற்சி செய்வதுடன் நிலங்களைத் தோண்டி, அதனுள் சில பழைய புத்த சின்னங்களை வைக்கின்றனர்.

பின்னர் தங்களின் வரலாற்று பௌத்த இடம் என்று கூறி , இலங்கை இராணுவத்தை அனுப்புவதன் மூலம் அந்த இடங்களை பாதுகாக்கிறார்கள். இறுதியில் ஒரு புத்த கோவிலைக் கட்டி சிங்கள மக்களை குடியேற்றுகிறார்கள்.இதை நாம் இனப்படுகொலை என்று அழைக்கிறோம்.

இந்தியாவின் அண்டை நாடான இலங்கையில் இந்து மதத்தைப் பாதுகாப்பது பிரதமர் மோடியின் கடமையாகும். இந்திய காங்கிரஸ் கட்சி எந்தவொரு அரசியல் தீர்வும் இல்லாமல் தமிழர்களை பலவீனப்படுத்தி, 2009 இல் நமது பாதுகாவலர்களை அழிக்க ஒரு பச்சை விளக்கு .மோடி இலங்கைக்கு வந்த போது கூட்டுறவு மற்றும் கூட்டாட்சிக்கு உறுதியளித்ததுடன் அதனை பரிந்துரைத்திருந்தார். அதை அமுல்படுத்துவதற்கு முன்னர் அது தொடர்பாக விளக்கமளிக்க இந்திய அரசியலமைப்பு அறிஞர்களின் ஆரம்பக் குழுவை அனுப்புவதற்கு எதுவும் செய்யப்படவில்லை. நாம் அதனை மிக விரைவில் செய்யும்படி கேட்கிறோம்.

இந்தியாவால் திணிக்கப்பட்ட அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்க முடியாது. அது இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்று ராவணபலய அமைப்பின் பொதுச்செயலர் சத்தாதிஸ்ஸ தேரர் வலியுறுத்தியுள்ளார். இது இந்தியாவின் வல்லமையை இழிவுபடுத்துவதாகும்.

இலங்கையின் வடகிழக்கில் உள்ள பண்டைய இந்து நாகரிகத்தையும், கோவில்களையும் பாதுகாப்பது இந்து நாடு என்ற வகையில் இந்தியாவின் கடமையாகும். இது இந்தியாவினால் செய்ய முடியும். 1987 இல் இந்தியா இங்கு வந்து 13ம் திருத்தச் சட்டத்தின் மூலம் வட கிழக்கை இணைத்து இது ஒரு தமிழர் தேசம் என்று அங்கீகரித்தமை குறிப்பிடத்தக்கது.

சுமந்திரன் புத்த மதத்திற்கு முதன்மையான இடத்தை கொடுத்ததும், இலங்கை ஒரு பௌத்த நாடு என்று இந்தியாவில் வைத்து சம்பந்தன் கூறியமையே இவையாவற்றுக்கும் காரணம் என்றனர்.

(ம-3,299)

# கள்ளவாக்கு விவகாரம் முறைப்படி முறையிட்டால் சிறீதரன் கைது செய்யப்படுவார்

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் குறிப்பிட்ட கள்ளவாக்கு விவகாரத்தில், யாராவது உரிய வகையில் முறைப்பாடு செய்தால், சிறீதரன் கைது செய்யப்படும் நிலை உருவாகும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அண்மையில் 2004ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தான் 75 கள்ளவாக்கிட்டதாக சி.சிறீதரன் பேட்டியொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்து விடுதலைப் புலிகளை கொச்சைப்படுத்தும் விதமாக சிறீதரன் நூதனமாக கருத்து தெரிவிக்கிறார் என சமூக ஊடகங்களில் விமர்சனம் கிளம்பியிருந்தது.இந்த நிலையில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது தேர்தல்கள் ஆணையாளரிடம் எழுப்பப்பட்ட கேள்வியொன்றிற்கு பதிலளிக்கும் போது, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,சிறீதரன் விவகாரம் பற்றி தற்போதுதான் கேள்விப்படுகிறேன் என்றும், இந்த விடயம் தொடர்பில் உறுதியான முறைப்பாடு தெரிவிக்கப்பட்டால் அவரைக் கைது செய்து விசாரிக்கும் நிலைமை ஏற்படும் எனவும் குறிப்பிட்டார்.

2004ஆம் ஆண்டு தேர்தலில் முறைகேடுகள் இடம்பெற்றதாக கூறப்பட்டு வந்த போதும், தற்போது தான் இந்த விடயம் தொடர்பில் அறிகிறேன் எனக் கூறிய அவர்,

ஆனந்தசங்கரியும் இது தொடர்பில் பல முறை குற்றச்சாட்டுக்களை சுமத்தி வந்ததாகவும் அவர் கூறினார்.

எனவே இந்த விடயம் பற்றி யாராவது முறையிட்டால விசாரணை மேற்கொள்வோம் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்தார். (ம-3)


## மரண அறிவித்தல்



கலாபூஷணம்

**இராமசாமி பாலசுப்பிரமணியம்**

பருத்தித்துறை மாதனையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராமசாமி பாலசுப்பிரமணியம் நேற்று (10.07.2020) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் சபாரத்தினம், குலசேகரம், காலஞ்சென்ற கனகாம்பிகை மற்றும் சறோஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கண்மணியின் அன்புக் கணவரும் கிருசாந்தி, ஜவஹர்லால்நேரு ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான ஜெகதாம்பாள், நடராஜா, மகேஸ்வரன் மற்றும் சந்தானலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் கங்காதரனின் அன்பு மாமனாரும் ஜதீஷனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

(C-9873)

077 692 7307 (மகன்)
075 210 1009 (மருமகன்)

தகவல்:- குடும்பத்தினர்



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 14 – 06 – 1938

உதிர்வு 03 – 07 – 2018

அமரர்

**சுப்பையா நாகேந்திரன்**

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்

(3270)

குடும்பத்தினர்

# நாட்டிற்கு கொரோனாவால் பேராபத்து
# இரண்டாவது அலை ஆரம்பம்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை



கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாவது அலையின் முதல் குழுவினர் அந்த பிரதேசத்தில் கண்டறியப்படலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்றும் அத்துடன் கந்தக்காடு புனர்வாழ்வு முகாமில் தொடர்ந்தும் கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்படுகின்றனர்.

எதிர் காலத்தில் மேலும் கொரோனா நோயாளிகள் அங்கு அடையாளம் காணப்படலாம் என்றும் தெரிவித்துள்ளார். (ஜ-8)

(கொழும்பு)

கந்தக்காடு புனர்வாழ்வு முகாமில் கொரோனா வைரஸ் தொற்றியவர்கள் அதிகளவில் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து கொரோனா வைரஸ் தொற்றினால் ஸ்ரீலங்காவிற்கு கடும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதனால் தினமும் 5 ஆயிரம் பி.சி.ஆர்.பரிசோதனைகளையாவது நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவி செயலாளர் மருத்துவர் நவீன் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

மாரவிலவில் அடையாளம் காணப்பட்ட பெண்ணின் மூலம்

# லொறி-ஆட்டோ மோதல் மூவர் பரிதாபமாகப்பலி



(வெல்லவாய)

வெல்லவாய - மொனராகலை பிரதான வீதியின் வருணகம பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

லொறி ஒன்றும் முச்சக்கர வண்டி ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ள நிலையில் மூவர் உயிரிழந்ததுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஜ-4)

# வீட்டுத்திட்டத்தில் நிதிமோசடி நான்கு பேர் விடுதலை

(கொழும்பு)

கடந்த 2006 ஆம் ஆண்டில் வடக்கு-கிழக்கு வீட்டுத் திட்டத்தில் நிதி மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட ராதா நிறுவனத்தின் முன்னாள் தலைவர் டிரான் அலஸ் உள்ளிட்ட 4 பேரையும் விடுதலை செய்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த வழக்கு தொடர்பான விசாரணை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி முன்னிலையில் நேற்று வெள்ளிக்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அவர் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார். (ஜ-4)



# எமது இனத்தின் வரலாறுகளைச் சிதைத்து தமக்கான புதிய வரலாற்றை எழுதப்பார்க்கிறார்கள்

## ஆட்சியாளர்களை சாடும் சிறீதரன்

(யாழ்ப்பாணம்)

எமது மண்ணினதும் இனத்தினதும் வரலாற்று அடையாளங்களை சிதைப்பதற்கோ மாற்றுவதற்கோ நாம் எவருக்கும் இடமளிக்க முடியாது என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தம்பகாமம் பகுதியில் மக்களுடனான சந்திப்பில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

எமது மண்ணின் தொல்பொருள் அடையாளங்களை கையகப்படுத்தும் வகையிலே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள தொல்லியல் செயலணியின் உறுப்பினரில் ஒரு தேரர் திருகோணமலை தங்களுடையது என்கிறார். நல்லூர் தங்களுடையது என்கிறார்.

எமது இனம் எமது இருப்பை தக்க வைப்பதற்காகவும் அரசியல் தீர்விற்காகவும் இந்த மண்ணிலே 70 ஆண்டுகளுக்கு மேலாகப் போராடிக்கொண்டிருக்கிறது. ஆயினும் சிங்கள அரசு எமது இனத்தின் வரலாற்றை அழிப்பதற்கு திட்டமிட்டு செயற்படுகிறது. அதிலும் குறிப்பாக கடந்த அரசு எமது மண்ணினுடைய வரலாறுகளை மாற்றுவதில் கடும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. குறிப்பாக கிளிநொச்சி மண்ணிலே



கிளிநொச்சி டிப்போச்சந்தியில் உள்ள இராணுவ நினைவுச்சின்னத்திலே பழைமை வாய்ந்த கற்களை வைத்து அந்த நினைவுச்சின்னத்தை கட்டியெழுப்பியிருப்பதன் நோக்கம் தான் என்ன? இதற்குப் பின்னால் வரலாற்றை மாற்றி அவர்கள் தங்களுக்கு தேவையான ஒரு வரலாற்றை எழுத சிங்கள அரசு விரும்புகிறது. அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க முடியாது.

நடைபெறப்போகும் தேர்தல் என்பது வெறும் பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்யும் தேர்தலாக நாம் நோக்க முடியாது. இந்தத் தேர்தல் எமது இனத்தின் இருப்புக்கான தேர்தல் எமது வரலாற்று அடையாளங்களை காப்பதற்கான தேர்தலாக நாம்நோக்க வேண்டும்எனவும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

## வரலாற்றில் இடம் பிடிப்பதைவிட மக்கள் மனதில் இடம் பிடிப்பதே முக்கியம்

### அங்கஜன் கூறுகிறார்



(சாவகச்சேரி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எனக்கு செய்த ஒரே நல்ல காரியம் எனக்கு வந்த பிரதி சபாநாயகர் பதவியை தடுத்து நிறுத்தி கிடைக்கவிடாமல் செய்தமை தான் என முன்னாள் விவசாயப் பிரதி அமைச்சரும்,யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் தென்மராட்சி-தனங்கிளப்புப் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் நிறைவடைந்த பின்னர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்னை அழைத்து உங்களை பிரதி சபாநாயகராக நியமிக்க விரும்புகிறேன் என்க் கூறினார். முதலில் நான் அவரிடம் அதற்கு மறுப்பைத் தெரிவித்தேன். காரணம் பிரதி சபாநாயகராக இருந்து மக்களுக்கு எதுவும் செய்ய இயலாது. அது மதிப்புக்குரிய ஓர் பதவி மட்டுமே. இருப்பினும் முன்னாள் ஜனாதிபதி 50 வருடங்களுக்குப் பின்னர் ஒரு தமிழருக்கு அதுவும் யாழ்ப்பாணத் தமிழருக்கு வரும் அந்த வாய்ப்பை நழுவ விடப் போகிறீர்களா? உரிமைக்காகத்தானே போராடுகிறீர்கள் என்று தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பணிப்பிற்கு அடிபணிந்து பிரதி சபாநாயகராக எனது பெயரை பரிந்துரை செய்வதற்கு ஆதரவைத் தெரிவித்தேன்.

அதனால் அவர் எனது பெயரை பாராளுமன்றில் சிபார்சு செய்தார். அந்நேரம் பாராளுமன்றத்தில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்து அங்கஜன் இராமநாதனுக்கு பிரதி சபாநாயகர் பதவி கொடுத்தால் நாம் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க மாட்டோம் எனத்.தெரிவித்திருந்தனர்.இன்றை வரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எனக்குச் செய்த ஒரே நல்ல காரியம் எனக்கு வந்த பிரதி சபாநாயகர் பதவியைத் தடுத்து நிறுத்தியமை தான் .பிரதி சபாநாயகர் பதவியைத் தடுத்தமையால் தான் எனக்கு பிரதி விவசாய அமைச்சர் பதவி கிடைத்தது. வரலாற்றில் இடம்பிடிப்பதனை விட மக்கள் மனங்களில் இடம் பிடிப்பதே முக்கியமானது என மேலும் தெரிவித்தார். (ஜ-2-30)

## தமிழர் தாயகத்தின் தனித்துவத்தைப் பாதுகாக்க தாய்த் திருநாடான இந்தியா உதவ வேண்டும்


### மருத்துவர் சத்தியலிங்கம் கோரிக்கை

(நெளுக்குளம்)

தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அண்மைக்காலமாக சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பு மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காகவே அரச தலைவரால் தமிழர் பிரதிநிதித்துவம் இல்லாத தனிச்சிங்களவர்களை உள்ளடக்கிய தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே தமிழர் தாயகத்தின் தனித்தவத்தை பாதுகாக்க வரலாற்று ரீதியாக மத, கலாசார, மொழி, பண்பாட்டு விடயங்களில் எமக்கு தாய் நாடாக இருக்கும் பாரத தேசம் தலையீடு செய்ய வேண்டுமென வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும் வன்னி தேர்தல் தொகுதியின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளருமான மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

ஊடகளுக்கு வழங்கிய அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,



கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமைகளை பாதுகாக்கும் செயலணியின் உறுப்பினரான எல்லாவல மேதானந்ததேரர் தெரிவித்து வருகின்ற கருத்துக்கள் இலங்கையில் வாழுகின்ற தமிழ் மக்களுக்கு பாரிய அச்சத்தை ஏற்படுத்துவதாகவுள்ளது. இதுவரை தமிழ் மக்களுக்கு எதிராக இன ரீதியிலான ஆக்கிரமிப்புகளை செய்தவர்கள் தற்போது மத ரீதியிலான ஆக்கிரமிப்பையும் செய்வதற்கான வேலைகளை ஆரம்பித்துள்ளார்கள்.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் தமிழர்களின் தாயகத்தில் சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பு மேலும் தீவிரமடைவதற்கான சாத்தியங்கள் உள்ளன.

தேர்தல் நெருங்கும் காலத்தில் சிங்கள பௌத்தர்களின் வாக்குகளை அதிகமாக பெற்றுக் கொள்வதற்கான உத்தியாக இவ்வாறான கருத்துக்களை முன்வைத்து வருகின்றார்.

ஏற்கனவே 30 வருட கொடிய யுத்தம் மக்களை பல வழிகளிலும் பாதித்துள்ளது. இந்த நிலையில் இவ்வாறான தொன்மையான மதம் சார்ந்த அடையாளங்களை தங்களுக்குரியதென உரிமை கோருவது பௌத்த சிங்கள பேரினவாத ஆக்கிரமிப்பின் அதியுச்ச செயற்பாடாகும். எனவே இந்த விடயங்களில் இந்திய அரசின் காத்திரமான பங்களிப்பு அவசியம் எனக்கருதுகின்றேன் என அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4-299)

தேர்தல் வியூகம்

## அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க மக்களின் பலமே வழிசமைக்கும்

### வினோநோகராதலிங்கம் தெரிவிப்பு


(மன்னார்)

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் எடுக்கப்பட்ட சகல முயற்சிகளையும் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு பூரணமான ஒத்துழைப்பையும் ஆதரவையும் அழுத்தங்களையும் எதிர் காலத்தில் வழங்கும் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களினுடைய ஆணையைப் பெற்று பலமான ஒரு சக்தியாக ஒரு மக்கள் இயக்கமாக பாராளுமன்றத்திலே எங்களுடைய தமிழத் தேசியக் கூட்டமைப்பு உறுதியான கொள்கைப்பாடுடன் உறுதியான எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நிச்சயமாக உங்களுடைய பலம் வழிசமைக்கும் என்று நாங்கள் நினைக்கிறோம்.




கடந்த தேர்தலில் அல்லது அதற்கு முன்னதாக தேர்தல் காலங்களில் மக்கள் எப்படியான ஆதரவை எங்களுக்கு தந்தார்களோ அதே ஆதரவை தருவார்கள் என்ற பூரண நம்பிக்கை இருக்கிறது.

நாம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து இருக்கின்றோம்.

அபிவிருத்திகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பூரணமான ஒத்துழைப்பையும் ஆதரவையும் அழுத்தங்களையும் எதிர் காலத்தில் வழங்கும் என்பதனை கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.(ஜ-2-285)


பாராளுமன்ற தேர்தல் – 2020 | யாழ் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
X 1
என் கனவு யாழ்
நோக்கிய பயணம்...
அன்பார்ந்த அரச உத்தியோகத்தர்களே !
முன்னெப்போதும் இல்லாதவாறு சகல பதவி நிலை உத்தியோகத்தர்களும் சுய கௌரவத்துடன் கடமையாற்ற வழிகோலுவேன்.
அக்ரஹார காப்புறுதி திட்டத்தை மெருகூட்டல்
அரச மானியத்தில் மோட்டார் சைக்கிள்
அரசியல் பழிவாங்கலற்ற அரச சேவை
நிரந்தர நியமனம் பெற்றுக்கொடுத்தல்
உள்நாட்டு அமைச்சின் நடமாடும் சேவை
அனைவருக்கும் சமனான அரச சலுகைகள்
அரச வீடமைப்புத்திட்டம்
சம்பள வேறுபாடுகளை தீர்த்தல்
பதவி உயர்வு தடைகளை நீக்கல்
தடைப்பட்ட வாகன அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுத்தல்
சீரான இடமாற்ற கொள்கை
வெளிநாட்டு புலமைப்பரிசில்
நிறைவேற்றுதர அதிகாரிகளுக்கு ஊக்குவிப்பு தொகை
நீண்ட கால இலகு கடன் திட்டம்
அரச சேவை வெற்றிடங்களை நிரப்பல்
2020 இல் பாராளுமன்றத்தை நோக்கி...
அங்கஜன்
இராமநாதன்
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி - Sri Lanka Freedom Party

# வலி.கிழக்கில் வரவேற்புத்தூண்கள் அமைக்கப்படவுள்ளன - தவிசாளர்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் எல்லைகளில் மும்மொழிகளிலான வரவேற்புக் கொங்கிறீட் தூண்கள் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இவ் வகையில் யாழ்.- பருத்தித்துறை வீதியில், யாழ்.- பலாலி வீதி, இருபாலை - கோண்டாவில் வீதி, கைதடி - மானிப்பாய் வீதி, புத்தூர் - சுன்னாகம் வீதி, இராச வீதி, அச்சுவேலி - பலாலி வீதி, தொண்டைமானாறு - தெல்லிப்பழை வீதி, புத்தூர் - சாவகச்சேரி வீதி ஆகிய பிரதான வீதியில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஆட்சி எல்லைகளிலேயே கொங்கிறீட்டிலான மும்மொழி வரவேற்பு தூண்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்காக சபை நிதியில் 1.42 மில்லியன் ரூபாயில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு கேள்விக்கோரல்கள் மூலம் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை யாழ்.குடநாட்டில் உள்ள பிரதேச சபைகளில் பரந்த பிரதேசத்தினை கொண்டுள்ளதுடன் 74 ஆயிரம் வரையிலான மக்களையும் கொண்ட பரந்த பிரதேசமாகும்.

இந்நிலையில் பிரதேச எல்லைகளுக்கு வரவேற்புத் தூண்களை இடுவதன் வாயிலாக பிரதேசத்திற்குள் வருபவர்களை சிறந்த முறையில் வழி காட்டவும் தமிழர் பண்புகளில் ஒன்றான வரவேற்கும் பாங்கை வெளிப்படுத்துவதாகவும் அமையும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார். (4-5)

# ஒவ்வொரு கிராமத்திற்கும் இராணுவ அலுவலர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வன்செயல்கள், போதைப்பொருள் கடத்தல்கள், இயற்கை வளங்களைக் கொள்ளையிடும் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில் இவ்வாறான சமூக விரோதக் குற்றங்கள் இடம்பெறும் பகுதிகளில் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக இராணுவ அலுவலர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

குறித்த இராணுவ அலுவலகருடன் இராணுவ சிப்பாய்களும் நியமனம் செய்யப்படுவார்கள். அவர்கள் கிராமமட்டத்தில் இடம்பெறும் குற்றச்செயல்கள் தொடர்பாக அவதானம் செலுத்துவதுடன் அவர்கள் ஊடாக குற்றவாளிகள் பொலிஸாருக்குப் பாரப்படுத்தப்படுவர்.

நியமிக்கப்பட்ட இராணுவ அலுவலகரின் பொறுப்புத் தொடர்பில் பொதுமக்களுக்கு தெளிவூட்டப்பட்டு வருகிறது. கிராம உத்தியோகத்தர் பிரிவில் இடம்பெறும் குற்றச்செயல்கள், போதைப் பொருள் விற்பனை, கடத்தல் உள்ளிட்டவை தொடர்பில் முதலில் அந்தப் பிரிவுக்குப் பொறுப்பான இராணுவ அலுவலகருக்குத் தெரியப்படுத்தப்படல் வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-8)


## அற்றோனித்தத்துவம் இல்லாதொழிக்கப்பட்டது தொடர்பான அறிவித்தல்

இலங்கை, முல்லைத்தீவு, முள்ளியவளை, கணுக்கேணி கிழக்கு எனும் விலாசத்தை சேர்ந்த ஐயாத்துரை ஜெயராசாவும் மற்றும் ஜெயராசா ராதிகாவும் 28.04.2019 ஆம் திகதியன்று முல்லைத்தீவு பிரசித்த நொத்தாரிசு தங்கராசா பரஞ்சோதி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் இல.9963 என்ற இலக்கத்தையுடையதும் இலங்கை, முல்லைத்தீவு, முள்ளியவளை, 3 ஆம் வட்டாரம் என்ற இலக்கத்தைச் சேர்ந்த பாலச்சந்திரன் செல்வராணி (இல.196880903848 என்ற தேசிய அடையாள அட்டை இன் உரிமையாளர்) என்பவருக்கு வழங்கப்பட்டதுமான விசேட அற்றோனித்தத்துவத்தை இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து இல்லாதொழித்து மற்றும் இரத்துச் செய்துள்ளோம் என இலங்கை சோசலிச குடியரசிற்கும் பொதுமக்களுக்கும் இத்தால் நாங்கள் அறிவிப்பதுடன் இலங்கை, முல்லைத்தீவு, முள்ளயவளை என்ற முகவரியில் அமைந்துள்ள "ஆலடியில் துண்டும் நாவலடியில் காடும்" என்று அழைக்கப்படுவது மேற்கூறப்பட்டுள்ள விசேட அற்றோனித்தத்துவத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் தொடர்பாக எமது சார்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் அல்லது எவ்விதத்திலும் எமது சார்பாக செயற்படும் அதிகாரத்தை பெறுநர் இழந்துவிடுவார் எனவும் முல்லைத்தீவு பிரசித்த நொத்தாரிசு தங்கராசா பரஞ்சோதி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 02.09.2011 ஆம் திகதியன்று இல.6262 என்ற இலக்கமுடைய அறுதியுறுதி ஆதனத்தின் சட்டரீதியிலான உரிமையாளர்கள் நாங்கள் தான் எனவும் அறிவிக்கின்றோம்.

இந்த அறிவித்தலின் திகதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டு மற்றும் இரத்துச் செய்யப்பட்டு இயங்காமல் இருப்பதும் செயல்வலுப்பெறாமலிருப்பதும் மேற்கூறப்பட்ட பாலச்சந்திரன் செல்வராணி மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயல் செயற்பாடு அல்லது எந்தவொரு கொடுக்கல் -வாங்கலும் நாங்கள் பொறுப்பேற்க மாட்டோம்.

மேற்கூறப்பட்டுள்ள விசேட அற்றோனித்தத்துவத்தின் இல்லாதொழிப்பது மற்றும் இரத்துச் செய்தல் தொடர்பாக எங்களால் அறிவிக்கப்பட்ட பணிப்புரைகள் எமது சட்டத்தரணியாகிய யாழினி கௌதமன் என்பவரால் பாலச்சந்திரன் செல்வராணி என்பவருக்கு ஏற்கனவே 17.02.2020 ஆம் திகதி கடிதமொன்றினால் அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஐயாத்துரை ஜெயராசா
ஜெயராசா ராதிகா

## NOTICE OF REVOCATION OF POWER OF ATTORNEY


We, IYATHURAI JEYARASA and RATHIKA JEYARASA of Kanukkerni East, Mulliyavalai, Mullaitivu Sri Lanka do hereby inform the Government of the Democratic Socialist Republic of Sri Lanka that We have with effect from the date of this Notice revoked and cancelled the Special Power of Attorney No.9963 attested by T.Paramsothy Notary Public on 28.04.2019 granted Balachanthiran Selvarani (Holder of National Identity card No.196880903848) of ward No.03, Mulliyavalai, Mullaitivu, Sri Lanka and that the said Grantee shall cease to have any authority whatsoever to act for us or on our behalf in any manner in relation to the property described in the schedule to the said special power of Attorney namely "Aladiyil Thundum Navaladiyilkadum" situated at Mulliyavalai, Mullaitivu Sri Lanka of which we are the lawful owners in terms of Deed of Transfer No.6262 dated 02.09.2011 attested by the T.Paramsothy Notary Public of Mullaitivu.

And that We shall not hold our self responsible for any act deed or transaction done or entered into by the said Balachanthiran Selvarani purportedly on the said special power of Attorney which stands revoked and cancelled inoperative and ineffective as from the date of this Notice.

The said Balachanthiran Selvarani had been previously informed by letter dated 17.02.2020 sent by our lawyer Yalini Gowthaman on our instructions of the revocation and cancellation of the said special power of Attorney

IYATHURAI JEYARASA
RATHIKA JEYARASA

(3261)

காரைநகர் பிரதேசத்தைச் சேர்ந்த கலைஞர்களுக்கு கலாசார அலுவல்கள் அமைச்சினால் கலைஞர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

# செயலகம் முன் வாள்வெட்டுச் சம்பவம்; சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலக ஊழியர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 6 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபரிடமிருந்து கைக்குண்டு, வாள்கள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்ட நிலையில் தனியாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த வழக்கிலும் அவரை எதிர்வரும் 23 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் மல்லாகத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் பிரகாஸ் எனும் சுற்றுச்சூழல் அதிகார சபை உத்தியோகத்தர் மீது நேற்று முன்தினம்காலை மாவட்டச்செயலகம் முன்பாக வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. நேற்றைய தினம் காலை கடமைக்காக வந்த போது அவரை பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் மாவட்டச் செயலக வாயிலுக்கு அருகில் வழி மறித்து அவர் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

தாக்குதலுக்கு இலக்கான உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்.தலைமைப் பொலிஸ் நிலையப் பெரும் குற்றத் தடுப்புப் பிரிவினர் 6 சந்தேக நபர்களையும் நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் 6 பேரும் யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

இதேவேளை "சந்தேக நபர்கள் 6 பேருக்கும் நேற்று முன்தினம் காலை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டிய நிலையில் காலை 8 மணியளவில் யாழ்.மாவட்டச் செயலக ஊழியர் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்று மல்லாகம் நீதிமன்றுக்குச் சென்றதாக யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ மன்றுரைத்தார்.

இதனையடுத்து நீதிவான் சந்தேக நபர்கள் 6 பேரையும் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (4-5-114)

# செயலக கீதம் உருவாக்குவதற்கான பாடலாக்கங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தால் பிரதேச செயலகத்திற்கான பிரதேச கீதம் ஒன்றினை உருவாக்குவதற்குத் தீமானிக்கப்பட்டுள்ளமையால் பாடலாக்கங்கள் கோரப்படுகின்றன.

யாழ்ப்பாண பிரதேசத்தின் சிறப்புக்கள், தொன்மைகள், பண்பாட்டு அம்சங்கள் மற்றும் இயற்கை வளங்கள் ஆகியவற்றினைப் பிரதிபலிப்பதாக பிரதேச கீத அமைப்பில் பாடலாக்கங்கள் அமைய வேண்டும்.

கிடைக்கப்பெறும் பாடலாக்கங்களிலிருந்து தெரிவுக்குழுவின் பரிசீலனையின் பின்னர் சிறந்த பாடலாக்கம் தெரிவு செய்யப்பட்டு பிரதேச செயலக கீதம் உருவாக்கப்படும். அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் 14.08.2020 இற்கு முன்னர் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் அறிவித்துள்ளார். (5)

## பளு தூக்கிகள் விவகாரம்

# இந்தியாவுடன் இணக்கப்பாட்டை எட்டுவதில் அரசாங்கம் தோல்வி



(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்ட மூன்று பளு தூக்கிகளையும் கப்பலிலிருந்து இறக்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக குறித்த கப்பலுக்கு சுமார் 900 இலட்சம் ரூபா வரை தாமதக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

குறித்த பளு தூக்கி விவகாரத்தை தொடர்ந்தும் துறைமுக தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் மற்றும் அரசாங்கத்தின் இழுபறிகளினாலேயே இவ்வாறானதொரு பாரிய தொகையை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சிக் கூட்டத்தின் போதே இந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

குறித்த பளு தூக்கிகளை கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தில் பொருத்துவது குறித்து இந்தியாவுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருந்த போதிலும் இணக்கப்பாட்டை எட்டுவதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு மே மாதத்தில் இலங்கை, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் கூட்டு முயற்சியாக கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய அபிவிருத்தித் திட்டத்திற்கான பூர்வாங்கல் ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் துறைமுகத்தின் உரிமம் 100 வீதமாக இலங்கை துறைமுக அதிகார சபையை சார்ந்திருக்கும் திட்டத்திற்கான செலவீனமாக 700 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் 0.1 வீதத்திலான 40 ஆண்டுகால மென் கடனை ஜப்பான் வழங்கவும் தீர்மானித்தது.

உலகில் மிகவும் சிறந்த துறைமுக தொழில்நுட்பம் ஜப்பான் வசமே உள்ளது. இவ்வாறானதொரு நிலையில் தான் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியா மற்றும் ஜப்பானின் கூட்டு முயற்சியில் அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே சீனாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மூன்று பளு தூக்கிகளை கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தில் பொருத்துமாறு வலியுறுத்தி துறைமுக தொழிற்சங்கம் போராட்டத்தில் ஈடுபட்டது.

எவ்வாறாயினும் குறித்த பளு தூக்கிகள் தற்போது கிழக்கு முனையத்தில் பொருத்தப்பட்டுள்ளதுடன், செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான கட்டளை கிடைக்கப் பெறவில்லை என இலங்கை சுதந்திர ஊழியர் சங்கத்தின் துறைமுகக்கிளையின் தலைவர் பிரசன்ன களுத்துரகே தெரிவித்தார். (ஜ-4)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ரேவதி 2
கி.பா: 11 சூரி,செவ் 3 ல்
உயரம்: 5’6”
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. காவல்துறை அதிகாரி
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10945

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: ரோகினி 1
கி.பா: செவ் 6 ல்
தகைமை/தொழில்: Master of Bussiness Administration (UK). Department Manager, Bussiness Development (Private)
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்
தொ.இ: B/10947

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 3
கி.பா: செவ் 11 ல்
உயரம்: 5’4”
தகைமை/தொழில்: Higher National Diploma in Construction Technology. வருமானப் பரிசோதகர் (அரச)
எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம்.
தொ.இ: B/10948

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: சூரி,செவ் 12 ல்
உயரம்: 5’5”
தகைமை/தொழில்: MBBS, வைத்தியர்
எதிர்பார்ப்பு: வைத்தியர் மட்டும்.
தொ.இ: B/10950

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூசம் 3
கி.பா: 38 செவ் 4 ல் உயரம்: 5’2”
தகைமை/தொழில்: Diploma in Law
எதிர்பார்ப்பு: அரச, உயர் தனியார் உத்தியோகம்
தொ.இ: G/10984

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 1
கி.பா: - செவ் 3 ல்
தகைமை/தொழில்: Management. UK. (not PR)
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/10989

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூராடம் 4
கி.பா: செவ் 1 ல் உயரம்: 158cm
தகைமை/தொழில்: வெளிவாரிப்பட்டதாரி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: அரச, உயர் தனியார் உத்தியோகம்
தொ.இ: G/10990

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 4
கி.பா: 28 செவ் 7 ல்
உயரம்: 5’4”
தகைமை/தொழில்:பட்டதாரி. ஆசிரியை.
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம். இவர் விவாகரத் தானவர். பிள்ளைகள் இல்லாத விவாகரத்தும் ஏற்றுக்கொள்ளப்படும்.
தொ.இ: G/10991

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## பொதுஅறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை

1972 ஆம் இலக்க 17.06.2016 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வலிகாமம் தெற்கு பிரதேசசபைக்குச் சொந்தமான உடுவில் பகுதியில் அமைந்துள்ள களவியாவத்தை வீதியினை "அதிபர் சிவாஜி வீதி" எனப் பெயர்மாற்றம் செய்யுமாறு அப்பகுதி மக்களால் கோரிக்கையொன்று எமது சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| வீதியின் இலக்கம் | : NJVSE 245 |
| வீதியின் ஆரம்பம் | : கைதடி மானிப்பாய் வீதி (சேர் சரவணமுத்து வீதி) |
| வீதியின் முடிவு | : டச் வீதி (சாமுவேல்மான் வீதி) |
| வீதியின் நீளம் | : 700 மீற்றர் |
| கிராம சே உ பிரிவு | : உடுவில் மத்தி வடக்கு |
| கிராம சே உ பிரிவு இல | : J/185 |

எனவே இவ்வீதி பெயர் மாற்றத்திற்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் எதிர்வரும் 27.07.2020ஆம் திகதிக்குள் எழுத்து மூலம் "தவிசாளர் வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம்" எனும் முகவரிக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை
சுன்னாகம்.

C-9870

# கடந்த 72 வருடங்களாக தமிழர்களின் அவலம் தொடர்கிறது

## கஜேந்திரகுமார் கவலை


(கிளிநொச்சி)

நாட்டில் கடந்த 72 வருடங்களாக தமிழர்களின் அவலம் தொடர்வதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிளிநொச்சி கண்ணகி நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் பரப்புரை கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்கள் தொடர்ந்து துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள். கடந்த 10 வருடங்களாக தமிழத் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு ஆதரவாக செயற்பட்டு வருகிறது.

இந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்குப் பாராளுமன்றத்தில்



மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கவில்லை எனில் தாங்கள் அந்த ஆதரவை வழங்குவதாக கூட தெரிவித்திருக்கிறார்கள் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த பரப்புரைக் கூட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் போட்டியிடுகின்ற கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் சட்டத்தரணி க.சுகாஸ் ம. கணபதிப்பிள்ளை போன்றோர் கலந்து கொண்டனர். (ஜ-315)

# இராணுவ மயமாக்கலுக்கான அத்திபாரம் இடப்பட்டுள்ளது

## மாவை சேனாதிராஜா எச்சரிக்கை

(சாவகச்சேரி)

நாட்டில் முழுமையான இராணுவ மயமாக்கலுக்கான அத்திபாரம் இடப்பட்டிருப்பதாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா சுட்டிக்காட்டினார்.

அண்மையில் சாவகச்சேரி பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரை நிகழ்வொன்றில்கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் சர்வதேச மனித உரிமைகள் பேரவையினால் போர்க் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் ஜனநாயக ரீதியாக ஆட்சி பீடத்தில் அரச தலைவராக, போர்த் தளபதிகளாக உள்ளனர்.

இது தான் அந்த ஆபத்தின் அறிகுறி. நான் பெரும்பான்மையாக வெற்றி கொண்டேன் என்று கூறியவர் இன்று அரச தலைவராக வந்திருக்கிறார்.

நாட்டில் ஆளுமை மற்றும் அறிவு படைத்த பொது ஊழியர்கள், சிறந்த நிர்வாகிகள் இருக்கின்ற போதிலும் கோட்டாபய ராஜபக்ஷ தன்னோடு சேர்ந்து போர் புரிந்த. எம் இனத்தை அழித்தவர்களை இன்று அமைச்



சுக்களின் செயலாளர்களாக, திணைக்களத் தலைவர்களாக, முக்கியச் செயலணிகளுக்குப் பொறுப்பானவர்களாக நியமித்துள்ளார்.

தற்போது முழுமை யான இராணுவ மயமாக்கலுக்கான அத்திபாரம் இடப்பட்டுள்ளது. எனஅவர்மேலும் குற்றஞ்சாட்டினார். (ஜ-4-30)

# பயங்கரவாதத்தில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும்

## சஜித் வலியுறுத்து

(கொழும்பு)

**பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் இன, மத பாகுபாடின்றி மரண தண்டனை வழங்கப்பட வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.**

குருநாகல் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.



குறித்த தேர்தல் பிரசார கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இந்த நாட்டின் ஒரு சிறிய தீவிரவாத பிரிவினரால் செயற்படுத்தப் பட்டதாகும்.

இந்த விடயத்தை அனைவரும் அறிவோம். இதற்காக நாட்டிலுள்ள முழு முஸ்லிம் சமூகத்தையும் பழிவாங்குவது சரிதானா?

சஜித் பிரேமதாஸவுக்கு முதுகெலும்பு இருக்கின்றது. தவறு என்றால் அதனை அஞ்சாமல் தவறுதான் என்று சுட்டிக்காட்டக் கூடிய தைரியம் எனக்கு இருக்கின்றது.

என்னைப் பற்றி பொய்யான பல விடயங்கள் கூறப்படுகின்றன. மேலும் பெயரளவிலான பௌத்தர்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

உங்களுக்கு நான் ஒரு போதும் பயமில்லை. உண்மையான பௌத்த ஆகமத்தை கடைப்பிடித்த ரணசிங்க பிரேமதாஸவின் மகன் என்பதை இவ்விடத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மேலும் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் இனம், மதம் மற்றும் குலபேதமின்றி மரண தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இதேவேளை எமது ஆட்சியில் மக்களின் அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு சிறந்த எதிர்காலத்தை அவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்க முடியும் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்பு 62 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த ஒருமாத காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த சுற்றிவளைப்பின் போது பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் 62 ஆயிரத்து 686 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. திட்டமிட்ட குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் குற்றப் புலனாய்வு பிரிவினர் விசேட சுற்றிவளைப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கமைய கடந்த மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை ஆறு மணிமுதல் கடந்த புதன்கிழமை நள்ளிரவு 12 மணிவரை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, சட்டவிரோத ஆயுதங்கள், போதைப் பொருட்கள், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்தமை தொடர்பிலும் பிடியாணை உத்தரவு வழங்கப்பட்டிருந்தவர்கள் மற்றும் பல்வேறு குற்றச் செயல்களில் தொடர்புடையதாகக் கூறப்படும் நபர்களே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது போதைப் பொருள் வைத்திருந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட 14 ஆயிரத்து 608 சந்தேக நபர்களுள் 8 ஆயிரத்து 87 சந்தேக நபர்கள் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 10 கிலோ 750 கிராம் 463 மில்லி கிராம் தொகை ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

கஞ்சா போதைப் பொருளுடன்6 ஆயிரத்து 6 பேர்கைது செய்யப்பட்டுள்ளதுடன். இவர்களிடமிருந்து 608 கிலோ 636 கிராம் 247 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. இதேவேளை ஐஸ் போதைப் பொருளுடனும் 515 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 3 கிலோ 390 கிராம் 577 மில்லி கிராம் ஐஸ்போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மதுபானம் தொடர்பில் இடம்பெற்ற சுற்றிவளைப்புகளில் 12 ஆயிரத்து 307 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து 4 இலட்சத்து 37 ஆயிரத்து 466 லீற்றர் மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை சட்டவிரோதமான முறையில் ஆயுதங்கள் மற்றும்வெடிமருந்துகளை வைத்திருந்தமை தொடர்பில் 139 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஆயுதங்கள் வைத்திருந்ததாக 128 பேரும், வெடிமருந்துகளை வைத்திருந்ததாக 11 பேருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 42 குழல் 12 ரக துப்பாக்கிகளும், 29 உள்நாட்டு துப்பாக்கிகளும், 74 ரிபிடர் ரக துப்பாக்கிகளும், 15 வேறுவகை துப்பாக்கிகளும், 4 கைத்துப்பாக்கிகளும் , 11 ரி-56 ரக துப்பாக்கிகளும், ரி-81 ரக துப்பாக்கி ஒன்றும் , 692 தன்னியக்க தோட்டாக்களும் மற்றும்6 வாள்களும், 2 கத்திகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இதேவேளை 367 கிராம் தொகை வெடி மருந்து , 23 டெட்டனேட்டர்கள் மற்றும் 21 கைக்குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 12 ஆயிரத்து 186 சந்தேக நபர்களும் வேறு வகையான குற்றச் செயல்களைப் புரிந்த 23 ஆயிரத்து 446 பேரும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதன் நோக்கிலே ெபாலிஸார் இந்த விசேட சுற்றிவளைப்பை முன்னெடுத்து வருகின்றனர். அதற்கமைய கடந்த ஒருமாத காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த சுற்றிவளைப்புகளின் போது 62 ஆயிரத்து 686 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# பயங்கரவாதத்துடன் எனக்கோ சகோதரர்களுக்கோ தொடர்பில்லை

## வாக்குமூலத்தின் பின் றிசாத்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடனோ வேறு எந்த பயங்கரவாதச் செயற்பாடுகளுடனோ தனக்கும் தனது குடும்பத்துக்கும் துளியளவும் தொடர்பு கிடையாதென முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.



நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அழைக்கப்பட அவர், சுமார் 10 மணிநேர விசாரணையின் பின்னர், ஊடகவியலாளரிடம்' கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், என்னிடம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்ட சம்பவங்கள் குறித்தே பல கேள்விகள் கேட்கப்பட்டன.

குண்டுதாரி இன்ஷாபின் மாமனாரான அலாவுதீன், முன்னர் நான் பதவி வகித்த அமைச்சின் கீழான கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை மற்றும் எனது அமைச்சின் கீழான நிறுவனங்களின் செயற்பாடுகள்தொடர்பிலும்விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும் நான் தெளிவான விளக்கங்களைக் கொடுத்தேன் என்றார்.

என்னைப் பொறுத்தவரையில் நான் நிரபராதி. சஹ்ரானை என் வாழ்நாளில் கண்டதே இல்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் எந்தவொரு செயற்பாட்டிலும் எனக்கு துளியளவும் தொடர்புமில்லை.

நான் பயங்கரவாதத்தை முற்றாக வெறுப்பவன். என்னையும் எனது சகோதரர்களையும் அநியாயமாக வேண்டுமென்றே இந்தச் சம்பவத்துடன் தொடர்புபடுத்துகின்றனர் என அவர் கூறினார். (ஜ-4)

# மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு தீர்மானம்-மகிந்த

(கொழும்பு)

பொதுத் தேர்தல் வெற்றியின் பின்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாவனெல்லை பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "ஐக்கிய தேசியக் கட்சியினர் இன்று எம்மோடு போட்டியிடுகின்றனர். எதிர்வரும் தேர்தலில் தற்போதைய அரசாங்கம் வெற்றி பெறும் என்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இவர்களுள் பெரும்பாலானவர்கள் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக போட்டியிடவில்லை.

அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தாவை கைப்பற்றுவதற்காகவே தேர்தலில் போட்டியிடுகின்றனர். அப்படியானால் அவர்கள் நீதிமன்றம் ஊடாக அதனை கைப்பற்றியிருக்கலாம்.

19 ஆவது அரசியலமைப்பின் ஊடாக பல்வேறு சிக்கல்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. எனவே எதிர்வரும் பொதுத் தேர்தல் வெற்றியின் பின்னர் உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம் என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்கின்றேன்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)



# 1921 முதல் இன்று வரை வடமாகாண பாராளுமன்றத் தேர்தல்களும் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும்

01


**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.




**இலங்கையின் அரசியல் யாப்புக்கள்**

இலங்கையின் நவீனகாலம், 1833 இல் ஏற்பட்ட கோல்புறூக்-கமரன் சீர்திருத்தத்துடன் ஆரம்பிக்கிறது. இதன் மூலம் நாட்டில் பயனோக்கு சார் தாராண்மைவாத அரசியல் பண்பாடு தோற்றுவிக்கப்பட்டதுடன் கண்டி மற்றும் கரையோர மாகாணங்களை இணைத்து ஒரே அரசாங்கமும் உருவாக்கப்பட்டது. ஒரு நிறைவேற்றுச் சபையும் சட்டவாக்கச் சபையும் உருவாக்கப்பட்டன. இவையே பிரதிநிதித்துவ அரசியலுக்கு அடித்தளமிட்டன. இச் சட்டவாக்க சபையே பாராளுமன்றமாக மாற்றம் பெற்றது.

இலங்கையில் ஆங்கிலேயரினால் அறிமுகப்படுத்தபட்ட அரசியல் யாப்புக்கள் - (1) கோல்புறூக் (1833) (2) குறு மக்கலம் (1910) (3) மனிங் (1921) (4) மனிங்-டிவன்சயர் (1924) (5) டொனமூர் (1931) (6) சோல்பரி (1947). சுதந்திரத்திற்கு பின் இலங்கையரினால் உருவாக்க பட்ட அரசியல் யாப்புக்கள்- (1) 1ம் குடியரசு அரசியல் அமைப்பு (1972) (2) 2ம் குடியரசு அரசியல் அமைப்பு (1978).

இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கேற்ப இலங்கைப் பாராளுமன்றம் (சட்டவாக்கச்சபை) காலத்துக் காலம் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டது. ஆரம்பத்தில் இலங்கைச் சட்டவாக்கச்சபை (**Legislative Council of Ceylon**,1833-1931) எனப்பெயர் பெற்று பின்னர் இலங்கை அரச சபை (**State Council of Ceylon**, 1931-1947), இலங்கைப் பாராளுமன்றம் (**Parliament of Ceylon**, 1947-1972), அதன்பின்னர் தேசிய அரசு பேரவை (**National State Assembly**, 1972-1978) ஆக மாறி இப்போது இலங்கைப் பாராளுமன்றம் (**Parliament of Sri Lanka 1978-present**) என அழைக்கப்படுகின்றது.

கோல்புறூக்-கமரன் ஆணைக்குழுவின் இவ் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் நிறுவப்பட்ட சட்டவாக்கப் பேரவையே (**Legislative Council of Ceylon**) இலங்கையின் முதலாவது பிரதிநிதித்துவ முறையிலான அரசாகப் பார்க்கப்படுகின்றது. இச் சட்டவாகச் சபைக்கு அங்கத்தவர்கள் எல்லோரும் ஆளுநரால் நியமிக்கப்பட்டதால் தேர்தல் தொகுதிகளெதுவும் எல்லை நிர்ணயம் செய்யப்படவில்லை. அங்கத்தவர்களின் நியமனங்களின் கால எல்லை வரையறுக்கப்படாததோடு ஆயுட்கால நியமனங்களாகவே கருதப்பட்டன.

**தேர்தல் தொகுதிகள் உருவாக்கம்**

குறு மக்கலம் அரசியல் அமைப்பின் பிரகாரம் இலங்கையில் வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாக்குரிமை மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை அல்லது கற்றோருக்கான வாக்குரிமை என அழைக்கப்பட்டது. (இது கல்வி அறிவு, சொத்து உள்ள 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டது).

இவ் ஆணைக்குழுவின் பரிந்துரையின்படி, நாடளாவிய மட்டத்தில் குறிப்பிட்ட (படித்த, பணவசதியுடைய) இலங்கையர்களுக்கு (கிட்டத்தட்ட 3000 பேர், இதில் சிங்களவர் - 56%, தமிழர் - 36%) மட்டுமே வாக்குரிமை வழங்கப்பட்டது. தமிழில் புலமையுள்ள படித்த இலங்கையர்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்ட வேண்டும் என்று யாழ்ப்பாணச் சங்கத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோள் கருத்தில் எடுக்கப்படவில்லை. குறு மக்கலம் அரசியல் அமைப்பின்படி தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்கள்:- ஐரோப்பியர் (நகரம் )-1, ஐரோப்பியர் (கிராமம்)-1, பறங்கியர் -1, படித்த இலங்கையர் -1 ஆகிய நான்கு பேராவர்.

**படித்த இலங்கையருக்கான தேர்தல் தொகுதில் நடந்த தேர்தல்கள்**

**1911 - முதலாவது சட்டவாக்கச்சபைத் தேர்தல் - படித்த இலங்கையருக்கான தேர்தல் தொகுதி**

1911 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது சட்டவாக்கச்சபைத் தேர்தலில் படித்த இலங்கையருக்கான தேர்தலில் அளிக்கப்பட்ட 2626 வாக்குகளில் 1645 வாக்குகளைப்பெற்ற சேர் பொன் இராமநாதன் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட தாழ்நிலச் சிங்களவரான டாக்டர் மாக்கஸ் பெர்ணந்துவை தோற்கடித்து முதல் சிறுபான்மைப் பிரதிநிதியாக வெற்றிபெற்றார். சேர் பொன்.இராமநாதன் வெற்றி பெறுவதற்கு சிங்கள மக்களிடையே இனவாதத்தை விட சாதிவாதம் மேலோங்கியிருந்ததும் ஒரு காரணமாகவிருந்தது. உயர் சாதிச் சிங்களவர்கள் சேர் பொன். இராமநாதனுக்கு வாக்களித்தார்கள்.

**1916/1917- இரண்டாவது சட்டவாக்கச்சபைத் தேர்தல் -படித்த இலங்கையருக்கான தேர்தல் தொகுதி**

1917 ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாவது சட்டவாக்கச்சபையின் படித்த இலங்கையருக்கான இரண்டாவது தேர்தலில் 1704 வாக்குகளைப்பெற்ற சேர் பொன்.இராமநாதன் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜே.எஸ்.ஜெயவர்த்தனவை (பெற்ற வாக்குகள்-41) தோற்கடித்து மீண்டும் வெற்றிபெற்றார். ஜே.எஸ். ஜெயவர்த்தன உயர் சாதியைச் சேர்ந்தவராகையால் தாழ்நிலச் சிங்களவர்கள் இத்தேர்தலில் சேர் பொன். இராமநாதனுக்கு வாக்களித்தார்கள். சேர் பொன். இராமநாதன் 1911 முதல் 1921 வரை உறுப்பினராகவிருந்தார்.

**ஆட்புல/பிரதேச ரீதியான (territorial) தேர்தல் தொகுதிகள் உருவாக்கம்**

1920 இல் இலங்கைச் சட்டவாக்கச்சபை மனிங் ஆணைக்குழுவினால் மேலும்' மறுசீரமைக்கப்பட்டு, ஆட்புல/பிரதேச ரீதியான (**territorial**) தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டன. இதன் பிரகாரம் வடமாகாணத்திற்கு ஒரு தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டு அது வடமாகாண தேர்தல் தொகுதி எனப்பட்டது.

**1921 - மூன்றாவது சட்டவாக்கச்சபைத் தேர்தல் - வட மாகாண தேர்தல் தொகுதி**

1920 இல் இலங்கைச் சட்டவாக்கச்சபை மனிங் ஆணைக்குழுவினால் மேலும் மறுசீரமைக்கப்பட்டு, வட மாகாணத்திற்கென ஒரு தொகுதி உருவாக்கப்பட்டது. மனிங் ஆணைக்குழுவின் பரிந்துரையை அடிப்படையாகக்கொண்டு, மூன்றாவது சட்டவாக்கச்சபைக்கான தேர்தல் 1921 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நடைபெற்றது. இத் தேர்தலில் வட மாகாணத்திலிருந்து வேலணையை பிறப்பிடமாகக் கொண்ட சட்டத்தரணி வைத்திலிங்கம் துரைசுவாமி 5836 வாக்குகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்டார். இவரை எதிர்த்துப் போட்டியிட்டவர் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரியைக் (கனகரத்தினம் மகா வித்தியாலயத்தை) கட்டி உருவாக்கிய ஆறுமுகம் கனகரத்தினம் ஆவார். இவர் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை 4443 ஆகும். வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை 13,937 ஆகும்.

மனிங்-டெவொன்சயர் ஆணைக்குழுவின் அரசியலமைப்பு என்பது இலங்கையில் 1924 முதல்1931 ஆம் ஆண்டு வரை பிரித்தானியரால் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட நான்காவது அரசியலமைப்பாகும். 1923 இல் இலங்கைச் சட்டவாக்கச்சபை மனிங்-டெவொன்சயர் ஆணைக்குழுவினால் மேலும் மறுசீரமைக்கப்பட்டு, அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. இதன் பிரகாரம் வடமாகாணத்திற்கான ஆட்புல/பிரதேச ரீதியான தேர்தல் தொகுதிகள் 5 ஆக அதிகரிக்கப்பட்டது. உருவாக்கப்பட்ட ஐந்து தேர்தல் தொகுதிகளின் பெயர்கள் 1. வடமாகாணம் (வட பிரிவு), 2. வடமாகாணம் (தென் பிரிவு), 3.வட மாகாணம் (கிழக்குப் பிரிவு), 4.வடமாகாணம் (மேற்குப் பிரிவு) 5.வடமாகாணம் (மத்திய பிரிவு) ஆகும்.

**1924 - நான்காவது சட்டவாக்கச்சபைத் தேர்தல் - வடமாகாண 5 தேர்தல் தொகுதிகள்**

மனிங்-டிவன்சயர் ஆணைக்குழுவின் ம்றுசீரமைப்பின்படி வடமாகாணத்திற்கு 5 தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டன. 1924 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் வடமாகாணத்தின் 5 தேர்தல் தொகுதிகளிலிருந்து அட்டவணை-1 இல் தரப்பட்டோர் தெரிவாகினர். வட மாகாணம் வட பிரிவுக்கு சேர் பொன்.இராமநாதன் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

அவர் 1930 இல் காலமானதைத் தொடர்ந்து 1931 இல் நடைபெற்ற இடைத்தேர்தலில் ஏ.அப்பாத்துரை வெற்றிபெற்றார்.

வடமாகாணம் தென் பிரிவுக்கு 1929 இல் நடைபெற்ற இடைத்தேர்தலில் ஹென்றி அலெக்சான்றா பற்றிக் சந்திரசாகர வெற்றிபெற்றார். வடமாகாணம் கிழக்குப் பிரிவுக்கு 1930 களில் நடைபெற்ற இடைத் தேர்தலில் ஆர். சிறீ பத்மநாதன் வெற்றிபெற்றார். டொனமூர் அரசியலமைப்பு என்பது பிரித்தானிய இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஐந்தாவது அரசியலமைப்பாகும். 1924 முதல் அமுலில் இருந்த மனிங்-டெவொன்சயர் ஆணைக்குழுவின் அரசியலமைப்பு, டொனமூர் ஆணைக்குழு மூலம் திருத்தியமைக்கப்பட்டு இவ் அரசியலமைப்பு உருவானது. **(தொடரும்...)**

**அட்டவணை-1. இலங்கை நான்காவது சட்டவாக்கச்சபைத் தேர்தல் - 1924**

| தேர்தல் தொகுதி | வெற்றிபெற்றவர் | வாக்குகள் |
|---|---|---|
| வட மாகாணம் (வட பிரிவு) | சேர் பொன் இராமநாதன் | போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டார் |
| வட மாகாணம் (தென் பிரிவு) | ஆறுமுகம் கனகரத்தினம் | 1,627 |
| வட மாகாணம் (கிழக்கு பிரிவு) (1924ம் ஆண்டு) | கதிரவேற்பிள்ளை பாலசிங்கம் | போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டார் |
| வட மாகாணம் (மேற்கு பிரிவு) | வைத்திலிங்கம் துரைசுவாமி | போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டார் |
| வட மாகாணம் (மத்திய பிரிவு) | சுப்ரமணியம் இராசரத்தினம் | 2,216 |
| வட மாகாணம் (கிழக்கு பிரிவு) (1925-02-14 தேர்தல்) | தம்பையா முதலியார் சபாரத்தினம் | 1,560 |
| வட மாகாணம் (தென் பிரிவு) இடைத்தேர்தல்-1929 | ஹென்றி அலெக்சான்றா பற்றிக் சந்திரசாகர | 2,580 |
| வட மாகாணம் (கிழக்கு பிரிவு) இடைத்தேர்தல்-1930 | ஆர். சிறீ பத்மநாதன் | 1,234 |
| வட மாகாணம் (வட பிரிவு) இடைத்தேர்தல்-1931 | ஏ. அப்பாத்துரை | 1,130 |

# போதைப்பொருள் கடத்தலுக்கு துணை போகும் பொலிஸ் அதிகாரிகளுக்கு மரண தண்டனை

## வலியுறுத்துகிறார் பிரதிப் பொலிஸ்மா அதிபர்



(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தலில் குற்றவாளிகளாக இருக்கும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு எதிராக மரண தண்டனை விதிக்க வேண்டும் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண வலியுறுத்தியுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பிரதி பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவில் பணியாற்றும் சந்தேகத்திற்கிடமான அதிகாரிகளுக்கு எதிரான விசாரணைகள் விரைவுபடுத்தப்பட்டு சட்டமா அதிபர் வழியாக நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படும் என்றும் சுட்டிக்காட்டினார்.

1979 இற்குப் பின்னர் நாட்டில் மரண தண்டனை அமுல்படுத்தப்படவில்லை. இருப்பினும், போதைப்பொருள் கடத்தலில் குற்றவாளி எனக் கண்டறியப்பட்ட அதிகாரிகள் எவருக்கும் எதிராக மரண தண்டனையை அமுல்படுத்த நீதிமன்றத்தில் கோரிக்கை வைக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

18 பொலிஸ் போதைப்பொருள் பணியக அதிகாரிகளின் இழிவான நடத்தை முழு பொலிஸாரையும் தலைகுனிய வைத்துள்ளது. எந்த ஊழல் அதிகாரிக்கும் இடமளிக்கவோ பாதுகாக்கவோ இலங்கை பொலிஸ் முற்படாது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-4)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீராவியடி கடையிற் சுவாமி கோவில் ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தியநாதன் தேவஸ்தான அலங்கார உற்சவம் நாளை மறுதினம் 13 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (5)

## வரலக்ஷ்மி நோன்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் வரலக்ஷ்மி விரதத்தை முன்னிட்டு எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் விசேட பூஜைகள் இடம்பெற்று வீதியுலாவின் பின் நோன்புக் காப்பு வழங்கப்படும்.

நோன்புக் காப்பு எடுப்பவர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி பதிவுகளை மேற்கொள்ளுமாறும் ஆலயத்தின் அனைத்து வழிபாடுகளும் இடம்பெறுமென ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (5)

## வாகன வரி அனுமதிப்பத்திரத்திற்கு மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் யாழ்.பிரதேச செயலகத்தில் இணையத்தின் ஊடாக வாகன வரி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான தானியங்கி இயந்திர கருமபீடம் கடந்த முதலாம் திகதி புதன்கிழமை முதல் இயங்கி வருகின்றது.

சுயமாக இணையத்தின் ஊடாக வரி அனுமதிப்பத்திரம் motorrafficnp@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிப்பதற்கு தேவையான அடிப்படை தேவைப்பாடுகள்.

❖மின்னஞ்சல் முகவரி.
❖Credit Card or Debit Card
❖வாகனத்தின் பதிவுச் சான்றிதழ்
❖வலுவில் உள்ள காப்புறுதிப்பத்திரம் (தரவுத்தளத்தில் பட்டியலிடப்பட்ட கம்பனியிடம் பெற்றுக்கொள்ளப்பட்டது).
❖இறுதியாக பெற்றுக்கொள்ளப்பட்ட வாகன வரி அனுமதிப்பத்திரம்
❖புகைப்பரிசோதனை அறிக்கை

ஆகியனவாகும்.

விண்ணப்பிக்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் மூலப்பிரதி 14 நாட்களுக்குள் வாகனம் பதிவு செய்யப்பட்ட உரிமையாளரின் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் மோட்டார் போக்குவரத்து திணைக்கள தலைமைக் காரியாலயத்தால் அனுப்பி வைக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு: 021 2216 695, 077 913 7431 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் அறிவித்துள்ளார். (5)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக கல்லூரியின் புனரமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா நாளை 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் விவேகானந்த மண்டபத்தில் அதிபர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர சபை முன்னாள் ஆணையாளரும் கிழக்கு மாகாண முன்னாள் செயலாளருமான வே.பொ.பாலசிங்கம் (பழைய மாணவர்), கௌரவ விருந்தினராக யாழ்.மாநகர சபை உறுப்பினர் இரா.செல்வவடிவேல் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

## நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களினதும் சந்தை வியாபாரிகளினதும் நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள் எதிர்வரும் 13,14,16,17 ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணி வரை திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள நல்லூர் பிரதேச சபை உப அலுவலகத்தில் நடைபெறும் என நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் தா.தியாகமூர்த்தி அறிவித்துள்ளார்.(4-5)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்


(யாழ்ப்பாணம்)

கொக்குவில சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் சனசமூக நிலையத்தில் தலைவர் இ.செல்வராஜா தலைமையில் நடைபெறும்.

இதில் நல்லூர் பிரதேச சபை சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. ஹேமா சிவசோதி மற்றும் ஜே/123 கொக்குவில் தென் கிழக்கு கிராம உத்தியோகத்தர் ஆர்.இரட்ணகோபால் ஆகியோர் கலந்து கொள்வர்.

கூட்டத்தில் பங்குபற்றுபவர்கள் அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (5)

## சட்டவிரோதமாக வெட்டப்பட்ட மரங்கள் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டன





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பகாமம் வனப் பகுதியில் சட்டவிரோதமாக அறுக்கப்பட்ட ஒரு தொகுதி பாலை மரங்கள் இராணுவத்தினரால் மீட்கப்பட்டு வன பாதுகாப்பு அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு குறித்த பகுதியில் சட்டவிரோதமாக மரம் வெட்டப்படுவதாக இராணுவத்தினருக்கு கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்ற இராணுவத்தினரும் வன அதிகாரிகளும் ஒரு தொகுதி மரங்களை மீட்டதோடு அந்த பகுதியில் இரண்டு நபர்களையும் கைது செய்தனர்.

இதனை தொடர்ந்து நேற்று முன்தினம் காலை முதல் இராணுவத்தினர் தொடர்ச்சியாக குறித்த பகுதியில் மேற்கொண்ட தேடுதலின் போது அறுத்து வைக்கப்பட்டிருந்த மேலும் ஒரு தொகுதி மரங்களையும் கைப்பற்றினர்.

குறித்த பகுதியில் பெறுமதி மிக்க நான்கு மிகப்பெரிய பாலை மரங்கள் அறுத்து விழுத்தப்பட்டு தீராந்திகளாக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டன.

அவைகள் வனவளத் திணைக்கள அதிகாரிகளிடம் உரிய நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தனர். (5-281)

## இராசிபலன்

11.07.2020
ஆனி 27, சனிக்கிழமை
சஷ்டி பிற்பகல் 2.33 மணிவரை
பூரட்டாதி காலை 7.06 மணிவரை
சுபநேரம் 2.59 - 4.29 மணிவரை
இராகு காலம் 8.59 - 10.29 மணிவரை
சந்திராஷ்டமம் - பூசம்
வளவன்


மேஷம்

தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.


ரிஷபம்

பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.


மிதுனம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரேக்கியமான நாள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


கடகம்

மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், கோபத்தைக் குறைத்து கொள்வது நல்லது.


சிம்மம்

உறவினர்களின் மனக் கசப்பிற்கு ஆளாகமல் பார்த்துக் கொள்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.


கன்னி

சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.


துலாம்

வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், நன்மைகள் நடைபெறும் நாள்.


விருச்சிகம்

சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தூர தேசத்து உறவினர்களின் வருகையுண்டு, பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.


தனுசு

பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும், எதிர்காலம் இனிமையாக அமையத் திட்டங்கள் தீட்டுவீர்கள்.


மகரம்

கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சகோதர வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரலாம்.


கும்பம்

கோரிக்கைகள் நிறைவேறும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட கவலைகள் தீரும், நண்பர்களால் வளர்ச்சி கூடும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள்.


மீனம்

புத்தி சாதுரியமாக நடந்து வளம் காணும் நாள், திட்டமிட்ட காரியத்தில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், புதியவர்களின் நட்பு கிடைக்கும், ஆன்மீக சிந்தனை மேலெங்கும் நாள்.

துன்பங்கள் நடுவிலே தங்கம் போல் மிளிர்

# அடிப்படைவாதத்திற்கு எதிராக வழக்கு தொடர்வதை நல்லாட்சி விரும்பவில்லை

## நாலக டி சில்வா சாட்சியம்

(கொழும்பு)


**உயிர்த்த ஞாயிறு தினத் தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியாக கருதப்படும் சஹ்ரான் ஹாசிம் தொடர்பில் தான் கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் விசேட விசாரணைகளை ஆரம்பித்து, அவர் தொடர்பில் மட்டும் 14 கோவைகளை பராமரித்து வந்ததாக பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வா தெரிவித்தார்.**

சஹ்ரானை கைது செய்ய தானே, அவருக்கு எதிராக திறந்த பிடியாணையை நீதிமன்றில் பெற்றதாக சுட்டிக்காட்டிய அவர், சஹ்ரானை கைது செய்ய அவரின் நடமாட்டம் தொடர்பில் தகவல்களை வெளிப்படுத்த வென, பிரத்தியேக ரி.ஐ.டி. அதிகாரியை (பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு) கல்முனையில் நிலை கொள்ளச் செய்த தாகவும் அவர் சுட்டிக்காட்டினார். உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில், கடந்த புதன்கிழமை இரவு சாட்சியமளிக்கும் போதே அவர் இந்த விடயங்களை வெளிப்படுத்தினார்.

அவர் சாட்சியத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"நான் கடந்த 2006 ஆம் ஆண்டு தேசிய உளவுத் துறையுடன் தொடர்புபட்டேன். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலை தொடர்ந்து நான் கொழும்பின் பாதுகாப்புக்கு பொறுப்பாக அரச உளவுச் சேவையில் செயற்பட்டேன். அந்தச் சந்தர்ப்பத்தில், முன்னாள் பாதுகாப்புச் செயலரும் தற்போதைய ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷவின் உயிரை இரு முறை காப்பாற்ற முடியுமானது.

பின்னர் 2014 ஆண்டு அரச உளவுச் சேவையின் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பாக நான் நியமிக்கப்பட்டேன். அந்த பொறுப்பு வழங்கப்பட்ட பின்னர் முதல்வதாக இஸ்லாம் அடிப்படைவாதம் தொடர்பில் தகவல் கிடைத்தது. மாளிகாவத்தை பிரதேசத்தில் பாரம்பரிய முஸ்லிம்களுக்கு எதிராக மாற்றுப் பாதையில் பயணித்த அப்துல் ராஷிக் என்ற நபர் தொடர்பில் அந்த தகவல் ஊடாக தெரியவந்தது.



எவ்வாறாயினும், அப்துல் ராஷிக்கினால் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தவ்ஹித் ஜமாத் அமைப்புடன் இணைந்திருந்த, காத்தான்குடி பிரதேசத்தை சேர்ந்த நபராக சஹ்ரான் ஹாசீமை அரச உளவுச் சேவை கடந்த 2014 ஆம் ஆண்டே இணங்கண்டிருந்தது. அப்போது அவரது நடவடிக்கைகள் அல்லது தீவிரவாத போக்குகள் வன்முறையை நோக்கி நகர்ந்திருக்கவில்லை. எனினும் ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாத்தின் போக்கு எச்சரிக்கை மணியாக இருந்தது.

2017 ஆண்டில் காத்தான்குடி பிரதேசத்தில் இருந்து வந்த வலிஉல்லா என்ற அமைப்பொன்று தேசிய தவ்ஹித் ஜமாத் அமைப்பின்வன்முறை நடத்தை குறித்து அப்போதைய பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜய சுந்தரவிற்கு முறையிட்டிருந்தனர். இந்நிலையில், முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்த முறைப்பாடளித்த அந்த குழுவினரை என்னிடம் அனுப்பி வைத்ததன் பின்னர் அது தொடர்பில் விசாரணையொன்றை ஆரம்பித்தேன்.

அப்போது தேசிய தவ்ஹீத் ஜமாத்தின் இணைய பக்கம் செயற்படவில்லை எனவும் அவர்களது முகப் புத்தக பக்கம் தொடர்பிலும் நான் பொலிஸ்மா அதிபருக்கு அறிக்கை ஊடாக தெளிவுபடுத்தியிருந்தேன்.

2018 ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் திகதி நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்து, சஹ்ரானை கைது செய்ய திறந்த பிடியாணையைப் பெற்றுக் கொண்டேன்.

இந்நிலையில் நான் 2018 செப்டம்பர் 20 ஆம் திகதி கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டேன். அவ்வாறு திறந்த பிடியாணை பெற்றது முதல் நான் கட்டாய விடுமுறையில் சென்ற காலம் வரையிலான 3 மாத காலப்பகுதியில் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் உளவுத் துறை அதிகாரிகளை ஈடுபடுத்தி சஹ்ரானின் மனைவியின் வீடு, குருணாகல், காத்தான்குடி பகுதிகளில் அவரைக் கைது செய்ய தேடுதல் நடத்தினேன். எனினும் அப்போது அவரைக் கைது செய்ய முடியாமல் போனது.

நான் பயங்கரவாத புலனாயவுப் பிரிவின் பிரதானியாக கடமைகளை பொறுப்பேற்றது முதல் ஒவ்வொரு வாரமும் பொலிஸ்மா அதிபருடன் திங்கட்கிழமைகளில் விஷேட சந்திப்புக்கள் இடம்பெற்றன. அதன் போது சஹ்ரான் தொடர்பிலும் வேறு முஸ்லிம் அடிப்படைவாத நடவடிக்கைகள் தொடர்பிலும் நான் 87 வாராந்த அறிக்கைகளை பொலிஸ்மா அதிபருக்கு கையளித்துள்ளேன். பாதுகாப்பு செயலாளரும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தனவும் பங்கேற்ற உளவுத்துறை மறுஆய்வுக் கூட்டத்தில் இந்த தகவலை பொலிஸ்மா அதிபர் பகிர்ந்து கொண்டிருந்தார்.

உண்மையில், முஸ்லிம் அடிப்படைவாத நடவடிக்கைகளுக்கு எதிராக அல்லது சஹ்ரானுக்கு எதிராக அப்போது பயங்கரவாத தடை சட்டத்தின் வழக்குத் தொடர்வதை அப்போதைய அரசாங்கம் விரும்பவில்லை" என நாலக சில்வா சாட்சியமளித்தார். (ஜ-2)

# பாரதம்

## உலகம் அன்பானவர்களால் அழகாகிறது

# மாற்றுத்திறனாளிக்காக பேருந்தை விரட்டிச் சென்ற பெண்

(டில்லி)

பார்வையற்ற மாற்றுத் திறனாளி ஒருவருக்காக பேருந்தை விரட்டிச் சென்று நிறுத்திய பெண் ஒருவரின் வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

உலகம் முழுவதையும் நடுங்க வைக்கும் கொரோனா வைரஸ் மனித இனத்திற்கு பெரும் தீங்கிழைத்து வருகிறது. இந்த நோய் தொற்றால் இறந்தவர்களின் உடல்களை குடும்ப உறுப்பினர்கள், உறவினர்களால் அடக்கம் செய்ய முடியாது.

சுகாதாரத்துறையினரே விஞ்ஞான ரீதியில் உடல்களை அடக்கம் அல்லது தகனம் செய்து வருகிறார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் மனிதநேயம் இன்னும் மரித்துப்போகவில்லை என்பதை காட்டும் நிகழ்வுகள் அவ்வப்போது ஆங்காங்கே நமக்கு உணர்த்திக் கொண்டுதான் உள்ளன.



அப்படி ஒரு சம்பவம் கேரளா மாநிலம், திருவல்லா பகுதியில் நடந்துள்ளது. திருவல்லா பகுதியைச் சேர்ந்தவர் சுப்ரியா என்ற பெண். இவர் வீதியில் நடந்து சென்று கொண்டிருக்கும் போது அந்த வழியே அரசு பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது. இந்நிலையில் ஒரு பார்வையற்ற முதியவர் அந்த பெண்ணிடம் எதார்த்தமாக இந்த பேருந்து திருவனந்தபுரம் செல்லுமா? என கேட்டிருக்கிறார். இந்நிலையில் அந்த பேருந்து அவ்விடத்தை விட்டு புறப்பட்டுச் சென்றது.

இதை அறிந்த அந்த பெண் தன் மூச்சு வாங்கும் அளவுக்கு வேகமாக ஓடி அந்த பேருந்தை நிறுத்தினார். பேருந்து நடத்துநரும் அந்த பெண் பேருந்தில் ஏறுவதற்காகத்தான் இவ்வளவு வேகமாக வருவதாக நினைத்து வண்டியை நிறுத்தினார்.

அந்த பெண் பேருந்து நடத்துநரிடம் சம்பவத்தை கூறிய நிலையில் ஓடிச் சென்று அந்த முதியவரை அழைத்து வந்து பேருந்தில் ஏற்றி விட்டு சென்றார்.

இச்சம்பவம் அங்கு கூடியிருந்தோர் மத்தியில் பெரும் பாராட்டை பெற்று தந்தது. (2)

# 4 மாவோயிஸ்டுகள் மீது பொலிஸார் என்கவுண்டர்

(பீகார்)

பீகாரில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 4 மாவோயிஸ்டுகளை பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.

வன்முறைத் தாக்குதல்கள் மற்றும் அரசின் நலத்திட்ட பணிகளை மேற்கொள்ள விடாமல் அரசு சொத்துக்களை சேதப்படுத்துதல் என பல்வேறு சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டு வரும் மாவோயிஸ்டுகளை ஒடுக்க சிறப்புப் பொலிஸார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், பீகார் மாநிலம் பாஷ்சிம் சம்பரன் மாவட்டம் பகாகா பகுதியில் மாவோயிஸ்டுகள் பதுங்கியிருப்பதாக தகவல் கிடைத்தது.

இதையடுத்து சகஸ்திர சீமா பால் மற்றும் சிறப்பு அதிரடிப்படை பொலிஸார் அங்கு சென்று மாவோயிஸ்டுகளை சுற்றி வளைத்தனர்.

அப்போது நடந்த துப்பாக்கிச் சண்டையில் 4 மாவோயிஸ்டுகள் கொல்லப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து நவீன ரக ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டன. (2)

# நைஜீரியாவில் பயங்கரவாதிகள் தாக்குதல் இராணுவ வீரர்கள் 35 பேர் உயிரிழப்பு



(அபுஜா)

நைஜீரியா நாட்டில் இராணுவத்தினரை குறிவைத்து பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 35 பேர் உயிரிழந்தனர். வடக்கு-மத்திய ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடுகளில் நைஜீரியாவும் ஒன்று. இந்நாட்டை சுற்றி லிபியா, சூடான் மற்றும் சாட் ஆகிய நாடுகள் அமைந்துள்ளன. இங்கு போகோஹராம், ஐ.எஸ்.போன்ற பயங்கரவாத அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன. இந்த பயங்கரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் பாதுகாப்பு படையினருக்கும் பயங்கரவாத குழுக்களுக்கும் இடையே அவ்வப்போது மோதல் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், நைஜீரியாவின் மைதுகுரி மாகாணத்தில் உள்ள மைதுகுரி-டம்போ தேசிய நெடுஞ்சாலையில் நேற்று அந்நாட்டு பாதுகாப்பு படையினர் இராணுவ வாகனத்தில் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு பதுங்கியிருந்த போகோஹராம் பயங்கரவாதிகள் இராணுவ வீரர்கள் சென்ற வாகனத்தை குறிவைத்து துப்பாக்கிச்சூடு தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 35 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். மேலும், 30 இற்கும் அதிகமான இராணுவ வீரர்களை பயங்கரவாதிகள் பிணைக்கைதிகளாக கடத்திச்சென்றனர். (2)

# அறிகு
# மூளை

## விஞ்ஞா

(லண்டன்)

### கொரோனாவா
### சுவாசப்பிரச்சிை
### அவர்களுக்கு மூளை
### விஞ்ஞானிகள் எச்ச

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்கு தடுப்பூசி கண்டு பிடிக்கும் முயற்சி ஒருபுறம் தீவிரமாக நடந்து வரும் நிலையில், கொரோனா வைரஸ் ஏற்படுத்தும் பாதிப்பு குறித்து உலகம் முழுவதும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஒருபகுதியாக, பிரிட்டன் விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் சிலருக்கு மூளை பாதிக்கப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

எந்தவித அறிகுறியும் இல்லாமல் கொரோனாத் தொற்று ஏற்பட்டவர்களுக்

## மாயமான தென்
## சடலமாக க



(சியோல்)

தென்கொரிய தலைநகரான சியோல் நக
Won-soon) மாயமான நிலையில், அவர் தற்
ளார். ஏழு மணி நேர தேடுதலுக்கு பின்னர் மே
சாங்பக் என்ற மலைப்பகுதியில் கண்டெடுக்கப்ப
டாவது சக்தி வாய்ந்த தலைவராக இருந்து
சூன், கடந்த 2014 ஆம் ஆண்டு மேயராக தே
ஆண்டு மிகப்பெரிய வெற்றி பெற்று மேயரான

கடந்த சில நாட்களுக்கு முன்னதாக சியோ
பெண் ஒருவர் மேயர் பார்க் மீது 'மி டூ' மூலம்
ப்பை ஏற்படுத்தினார். இந்நிலையில் மேயர் பார்க்
மாயமான தகவலை அவரது மகள் தான் முத

இதையடுத்து விசாரணை நடத்திய பொ
இறுதியாக சியோலின் சங்பக் என்ற மலைப்
கண்டறிந்து, மலைப்பகுதிக்கு விரைந்து தே
டுத்தனர். சுமார் 7 மணி தேடுதலுக்கு பின்ன
இந்த நிலையில் இவரது மரணம் தொடர்பாக
இது குறித்து விசாரணைகளை முன்னெடுத்

# வெளிநாடு

# குறியற்ற கொரோனாவால்
# ளையில் பாதிப்பு ஏற்படலாம்

## ஞானிகள் எச்சரிக்கை

**னாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடுமையான ச்சினை அறிகுறிகள் இல்லாவிட்டாலும், த மூளையில் பாதிப்புகளை ஏற்படுத்தலாம் என ள் எச்சரித்துள்ளனர்.**

றை தடுப் முயற்சி ம் நிலை படுத்தும் தும் ஆய் ன்றன. ரிட்டன் ஆய்வில் வர்களில் து கண்ட


லாமல் வர்களுக்

கும். தொற்றிலிருந்து விடுபட்டவர்களில் மட்டுமே இந்த மூளைப் பாதிப்பை அதிக அளவில் பார்க்க முடிவதாக விஞ்ஞானிகள் தங்கள் ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளனர். சிலருக்கு கொரோனாவின் முதல் அறிகுறியாக இந்த மூளை பாதிப்பு இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் கொரோனாப் பாதிப்பு தொடங்கியது முதல் தற்போதுவரை, மூளை பாதிப்பு ஏற்படுவோரின் எண்ணிக்கை 3 சதவீதம் வரை உயர்ந்துள்ளதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

40 பேரிடம் மேற்கொண்ட சோதனையில் 12 பேருக்கு மூளை வீக்கம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. 10 பேருக்கு மயக்கம் இருந்ததும், 8 பேருக்கு நரம்பு பாதிப்பு இருந்ததும், மேலும் 8 பேருக்கு பக்கவாதத்தை ஏற்படுத்தக் கூடிய நரம்பு மண்டல பாதிப்பு இருந்ததாகவும் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பாதிப்பு ஏற்பட்டோரில் 5 சதவீதம் பேர் உயிரிழந்தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலா




னோர் குணமடைவதாகவும் ஆனால் சிலருக்கு இந்த மூளைப் பாதிப்பு நீண்ட நாள் பிரச்சினையாக மாறுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

ஆரம்பகால நோயறிதல்களுக்கு உதவுவதற்கும் நோயாளியின் குணப்படுத்துதலை மேம்படுத்துவதற்கும் நரம்பியல் விளைவுகளின் ஆபத்து குறித்து மருத்துவர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

எனவே, கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த நோயுடன் தொடர்புடைய கடுமையான சுவாசப் பிரச்சினைக்கான அறிகுறிகளை காட்டாவிட்டால் கூட, அவர்களுக்கு பக்கவாதம், நரம்பு பாதிப்பு மற்றும் ஆபத்தான மூளை வீக்கம் உள்ளிட்ட நரம்பியல் சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும் என் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். (2)

## தென்கொரிய மேயர்
## க கண்டெடுப்பு



சியோல் நகரின் மேயர் பார்க் ஒன் சூன் (Park
ல், அவர் தற்போது சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்
பின்னர் மேயர் பார்க் ஒன் சூன் உடல், சியோலின்
ண்டெடுக்கப்பட்டுள்ளது. தென்கொரியாவின் இரண்
க இருந்து வந்த 64 வயதான மேயர் பார்க் ஒன்
மேயராக தேர்வானார். அதன்பின்னர் 2018 ஆம்
று மேயரானார்.
ாதாக சியோல் மேயர் அலுவலகத்தில் பணிபுரியும்
மிடு' மூலம் பாலியல் குற்றச்சாட்டுகள் சுமத்தி பரபர
மேயர் பார்க் ஒன் சூன் திடீரென மாயமானார். அவர்
ள் தான் முதல்முதலாக பொலிஸிற்கு அறிவித்தார்.
டத்திய பொலிஸார், அவரது கைத்தொலைபேசி
ன்ற மலைப்பகுதியில் செயற்பாட்டில் இருந்ததை
விரைந்து தேடுதல் நடவடிக்கையினை முன்னெ
க்கு பின்னர் அவரை சடலமாக கண்டெடுத்தனர்.
தொடர்பாக சந்தேகம் கொண்டுள்ள பொலிஸார்
முன்னெடுத்து வருகின்றனர். (2)

# ஹொங்கொங்கில் மாணவர்கள்
## அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடத்தடை



(ஹொங்கொங்)

ஹொங்கொங்கில் பள்ளி மாணவர்கள் அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபட தடை விதிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து தனது பிடியில் இருந்த ஹொங்கொங்கை கடந்த 1997ஆம் ஆண்டு சீனாவிடம் ஒப்படைத்தது. ஒரே நாடு இரண்டு அமைப்புகள் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் சில உரிமைகளை ஹொங்கொங் மக்களுக்கு வழங்குவதற்கு குறைந்தது 50 ஆண்டுகளுக்கு சீனா உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

ஆனால் சீனா அவ்வாறு நடந்துகொள்ளாமல் ஹொங்கொங் மக்களின் தன்னாட்சியை பறிக்கிற வகையில் நடந்து வருகிறது.

அந்த வகையில் அண்மையில் ஹொங்கொங்கில் சர்ச்சைக்குரிய பாதுகாப்பு சட்டம் ஒன்றை சீனா அமுல்படுத்தி உள்ளது. இது உலக நாடுகளின் எதிர்ப்புக்கு வழிவகுத்தது.

அந்த சட்டத்தின்படி, ஹொங்கொங்கில் கடந்த புதன்கிழமை தேசிய சீன பாதுகாப்பு அலுவலகம் திறக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து அங்கு பள்ளி மாணவர்கள் அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபட தடை விதித்து உத்தரவு போடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவின்படி, மாணவர்கள் பாடல்கள் பாடுவது, கோஷங்கள் போடுவது, வகுப்பறைகளை புறக்கணிப்பது உள்ளிட்ட எந்தவொரு நடவடிக்கையிலும் இனி ஈடுபட முடியாது என்று பிரதேச கல்வி அமைச்சர் கெவின் யியுங் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் ஹொங்கொங் நூலகங்களில் இருந்து ஜனநாயக ஆதரவு புத்தகங்கள் அகற்றப்பட்ட நிலையில், இப்போது மாணவர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட தடை விதித்திருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (2)

# அரச உத்தியோகத்தர்கள் மீது

## அரசாங்கம் அக்கறையின்றி செயற்படுகிறது

### மத்துமபண்டார குற்றச்சாட்டு

(கொழும்பு)

**அரச உத்தியோகத்தர்கள் மீது அரசாங்கம் அக்கறையின்றி செயற்பட்டு வருவதாக குற்றஞ்சாட்டிய ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு தகுந்த பதிலடியை அரச உத்தியோகத்தர்கள் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.**



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச ஊழியர்களின் நலன் கருதி நல்லாட்சி அரசாங்கம்பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்திருந்தது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் முன்னாள் ஆட்சிக்காலங்களில் அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை 2500 ரூபாவால் அதிகரிப்பதாக தெரிவித்து வந்த போதிலும் அதனை நிறைவேற்றவில்லை.

இராணுவத்தினர் பொலிஸார் மற்றும் அங்கவீனமடைந்துள்ள இராணுவத்தினருக்கும் நல்லாட்சி அரசாங்கத்திலே பல்வேறு நலன்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டது. ஜனாதிபதித் தேர்தல் பிரசார காலங்களில் அங்கவீனமடைந்துள்ள இராணுவத்தினரைப் பயன்படுத்தி போராட்டங்களைக் கூட நடத்தி வெற்றி பெற்றவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா?

அரச நிர்வாகப்பிரிவினருக்கு பெரிதும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ள அரசாங்கத்தினர் மீது அரச உத்தியோகத்தர்கள் தகுந்த பதிலடியை கொடுக்க வேண்டும். கொவிட்-19 வைரஸ் பரவலை காரணங்காட்டி அவர்களின் சம்பளத்தையும் கைப்பற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். எமது ஆட்சியில் நாங்கள் மின்சாரம் மற்றும் நீருக்கான கட்டணங்களை குறைக்க நடவடிக்கை எடுத்திருந்தோம், ஔடதங்களின் விலை, எரிபொருள் விலை என்பவற்றை குறைக்க நடவடிக்கை எடுத்திருந்தோம்.

ஒரு வருடத்திற்கான மின் கட்டணத்தை இரு மாதங்களிலே பெற்றுக் கொள்ள அரசாங்கம் முயற்சிக்கின்றது. இந்நிலையில் தபால்மூல வாக்களிப்புகள் எதிர்வரும் வாரங்களில் இடம்பெறுகின்றது. இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு அரச உத்தியோகத்தர்கள் தகுந்த பதிலடியை கொடுக்கும் வகையில் வாக்களியுங்கள் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# எமிரேட்ஸ் மற்றும் ஜப்பானிலிருந்து 278 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து 278 இலங்கையர்கள் நேற்று நாட்டை வந்தடைந்தனர்.

இலங்கை எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான யு.எல்.-226 என்ற சிறப்பு விமானத்தின் மூலமாகவே அவர்கள் நேற்று அதிகாலை 4.50 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இதேவளை ஜப்பானின் நரிட்டோவிலிருந்து இலங்கை எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யு.எல்.-455 என்ற சிறப்பு விமானத்தின் மூலம் நேற்று அதிகாலை 4.10 மணிக்கு மேலும் ஐந்து இலங்கையர்கள் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மேலும் அதிகாலை 1.15 மணியளவில் கட்டாரின் டோஹாவிலிருந்து கட்டார் எயார்வேஸ் விமானத்தின் மூலமாக 24 வெளிநாட்டு மாலுமிகளும் விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைவரையும் பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்கு உட்படுத்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருந்ததாக விமான நிலைய ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஜ-8)

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் கொரோனா பரிசோதனை கூடம் திறப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து நாட்டிற்கு வருகை தரும் பயணிகளுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளும் பொருட்டு பரிசோதனைக் கூடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய ஆய்வகம் கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கட்டுநாயக்க விமான நிலையத்தினை வந்தடையும் பயணிகளுக்கு இலவசமாக பி.சி.ஆர்.பரிசோதனையை மேற்கொள்ளல் மற்றும் அதன் முடிவு அறிக்கையினை வெளியிடுதல் போன்ற நடவடிக்கைகள் குறித்த ஆய்வகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆய்வகத்தில் ஒரேநாளில் 500 பயணிகளுக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## குணமும் செயலும்!

ஒரு இளம் துறவி வந்தார். அங்கேயிருந்த ஒரு அம்மாவின் முன்னால் நின்றார். “அம்மா! நான் அமெரிக்காவுக்குப் போகிறேன். என்னுடைய பிரயாணம் நல்ல படியாக அமைய வேண்டும். அங்கே என்னுடைய பணிகள் எல்லாம் வெற்றிகரமாக முடிய வேண்டும். அதுக்கு நீங்கள் என்னை ஆசீர்வதிக்க வேண்டும்” என்றார்.

அந்த அம்மா இதைக் காதிலே வாங்கியதாகத் தெரியவில்லை. அவர் தன்பாட்டிலே உட்கார்ந்து இருந்தார். கொஞ்ச நேரம் கழித்து பார்வையை இலேசாக திருப்பினார்கள். இதுதான் சமயம் என்று பார்த்து அந்த இளம் துறவி மறுபடியும் தன்னுடைய வேண்டுகோளைச் சொன்னார். அவர்கள் இதைக் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. என்னவோ யோசனையில் இருந்தார். கொஞ்ச நேரம் கழித்து அந்த இளம் துறவியிடம் வேறு எதையோ பேச ஆரம்பித்தார்.

மகனே! நீ எனக்கு உதவி செய்ய வேண்டும் என்றார். என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள் உடனே செய்கிறேன்! என்றார் இவர். வேறு ஒன்றும் இல்லை. இதே பக்கத்தில் உள்ள அந்த அறைக்குப் போ... அங்கே அந்த அறைக்குப் பின்னால் ஒரு கத்தி இருக்கின்றது. அதை எடுத்து வந்து என்னிடம் கொடு! அவ்வளவும்தான் என்றார். இளம் துறவி யோசித்தார். என்ன இது நான் கேட்பது ஆசீர்வாதம். அவர் கேட்பது கத்தி... ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாமல் இருக்கே! என்று நினைத்தார். அவருக்கு குழப்பமாக இருந்தது. இருந்தாலும் அதைப்பற்றி மேற்கொண்டு அவர் எதுவும் யோசிக்கவில்லை. நேராகப் போனார்... அந்தக் கத்தியை எடுத்துக்கொண்டு வந்தார். இந்தாருங்கம்மா...கத்தி என்றார். அந்த அம்மா அதை கவனமாக வாங்கிக்கொண்டார். அதற்குப் பிறகு சொன்னார்... மகனே உன்னுடைய பயணம் நல்லபடியாக அமையட்டும்... போய் வா! என்று கையை உயர்த்தி அந்த இளம் துறவியின் தலையிலே வைத்து ஆசி வழங்கினார்.

அம்மா இந்த கத்திக்கும் உங்கள் ஆசீர்வாதத்துக்கும் என்ன சம்பந்தம் என்று எனக்கு விளங்கவில்லை என்றார் இவர். இப்போது அந்த அம்மா விளக்கம் கொடுக்கின்றார்.

‘மகனே! நீ இந்தக் கத்தியை எடுத்துக்கொண்டு வந்து என்னிடம் கொடுத்தாய்! அப்படிக் கொடுக்கும் போது கத்தி இருக்கும் கூரான பகுதியை உன் பக்கம் இருக்கிற மாதிரி பிடித்துக்கொண்டு கைப்பிடி இருக்கிற ஆபத்தில்லாத பகுதியை என் பக்கம் நீட்டிக்கொடுத்தாய்.

இதிலே இருந்து நான் என்ன தெரிந்து கொண்டேன் என்றால்... எந்த ஒரு செயலையும் செய்யும் பொழுதும் அதனாலே ஏற்படக்கூடிய தீமைகளை நீ ஏற்றுக்கொண்டு மற்றவர்களுக்கு நன்மையே செய்வாய் என்பதைப் புரிந்து கொண்டேன். இந்த உயர்ந்த குணம் எல்லோருக்கும் வராது என்று சொன்னார். அம்மா நான் இதை எல்லாம் யோசித்து அப்படிச் செய்யவில்லை. நீங்கள் கத்தியை என்னிடம் இருந்து வாங்கும் பொழுது கூரியமுனை உங்களை குத்திடும் என்பதற்காக அந்த கைப்பிடியை உங்கள் பக்கம் நீட்டினேன். அவ்வளவுதான் என்றான்.

உன்னை அறியாமலே மற்றவர்களுக்கு நன்மை செய்கின்ற இயல்பான குணம் உனக்கு உண்டு. அந்த இயல்பு இன்னமும் உயர்ந்தது. அந்தக் குணம் எப்பவும் உன்னை அடுத்தவர்களுக்கு தீங்கு செய்ய விடாது. மறுபடியும் ஆசீர்வாதம் செய்தார் அந்த அம்மா. இது போலவே ஒவ்வொருவரினதும் செயலிலே அவரவர் குணம் எப்படி என்பதனை காட்டிக் கொடுத்துவிடும். நமது ஆட்கள் சிலரை கத்தி எடுத்துக்கொண்டு வந்து கொடுக்கச் சொன்னால் முகத்துக்கு நேராக குத்துவது போல் கொண்டு வந்து கொடுப்பார்கள்.

புத்தியைப் பயன்படுத்தத் தெரியாதவர்களுக்கு கத்தியையும் பயன்படுத்தத் தெரியாது. அதனால் தான் அது வன்முறைக்கு உபயோகிக்கப்பட ஆரம்பித்து விட்டது. அந்தக் கத்தி அவனுக்கு இடைஞ்சலாக வந்து முடியும்.

சமூக விரோதிகள் இரண்டு பேர் ஒரு காரிலே போய்க்கொண்டு இருந்தார்கள். ஒருவன் கார் ஓடினான். இன்னொருவன் ஒரு வெடிகுண்டை பத்திரமாக மடியிலே வைத்துக்கொண்டு போகிறான். ரோட் குண்டும் குழியுமாக இருந்தது. வெடிகுண்டு வைத்திருந்தவன் சொன்னான்... டேய் காரை மெதுவாக ஓட்டு. கார் ஆடும் ஆட்டத்திலே இந்த வெடிகுண்டு வெடிக்கப்போகின்றது என்றான்.

அதுக்கு அவன் சொன்னான்.அதற்காகக் கவலைப்படாதே... அப்படி ஏதாவது ஆனால் உபயோகப்படும் என்பதற்காகத்தான் உனக்குத் தெரியாமல் இன்னொரு வெடிகுண்டு எடுத்து வைத்துள்ளேன். இந்தக் காரின் டிக்கியிலே என்றான்.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–209

## மிரட்டுவதில் கொரோனாவை மிஞ்சிய போதைப் பொருட்களின் சந்தைப்படுத்தல்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

உணவுப்பஞ்சம் (Food Crisis) வரும். வருகின்றது. வரலாம் என்னும் கோஷங்கள் அவ்வப்போது அலையலையாக வந்து கொண்டிருக்கின்றன. இது எம்மை முன்கூட்டியே தயார்படுத்தலுக்கான அறிவுப்புக்கள் என வெறுமையாக கருதாமல் அதிலிருக்கின்ற உள்ளார்ந்த அர்த்தத்தையும் நாம் உணர்ந்து கொள்ளுதல் தகும். கொரோனாவின் ஆதிக்கம் உலகளவில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்திக் கொண்டிருப்பதனை நாம் தினம் தினம் அவதானித்துக் கொண்டிருந்தாலும் எமக்கான பாதிப்பு என்பது மிகமிகக் குறைவானதே. இதற்கான காரணங்களை திருப்பிப்பார்த்தால் எமது நாட்டில் ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கட்டமைப்பு மிக அதிகரித்த எண்ணிக்கையும் இந்த வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களின் அதிகரிப்பும் எமது எதிர்காலத்தை மிகவும் கேள்விக் குறியாக்கி விட்டிருக்கின்றது என்பதனை உணர்ந்து கொள்ளுங்கள். இது கொரோனாத் தாக்கத்தைவிட மிகவும் பாரதூரமானது என்பதனை நாம் இன்னும் உள்ளுணர்ந்து கொள்ளவில்லை. எமக்கே தெரியாமல் எமக்குள்ளே இந்த போதைப் பொருள் பயன்பாடு பலரை உள்ளீர்த்துக் கொண்டிருக்கின்றது. எமது சமூகத்தினுள் ஆழ வேரூன்றும் கொடிய போதைப்பொருள் வர்த்தகம் அதிலும் இளையவர்களை குறிவைத்து அந்த சிற்றின்பத்தை நுகர விரைந்து பரவிக் கொண்டிருக்கின்றது. இளையவர்கள் மத்தியில் குறிப்பாக மாணவர்களை மையப்படுத்தி போதைப் பொருள் அடிமைகளாக்கி விட்டு அதில் இலகுவாக வர்த்தகம் செய்ய முனையும் தந்திரத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். பயிர்ச்செய்கையில் படுகின்ற இன்னல்கள் போக அதனை அறுவடை செய்து விற்பனை செய்வதில் படுகின்ற இன்னல்கள் ஒருபக்கமிருக்க உலக சந்தையில் சந்தைப்படுத்துவதற்கு எம்மை முதலில் தயார் செய்வதிலுள்ள இடர்பாடுகளை இனங்கண்டு அதனை களைவது பற்றிய நீண்ட செயற்பாடுகள் செயலணிகளை முயற்சிக்கும் வேளையில் எந்த முன்னேற்பாடுகளுமின்றி கருத்தரங்குகளோ. மூலோபாய தயார்படுத்தல்களுமன்றி போதைப் பொருள் வர்த்தகம் இவ்வாறு வியாபித்து விரிவுபடுத்தப்பட்டு செல்வதற்கான காரணங்களை முழுவதுமாக அவசியமானதாகும். பலசாலியையும் நலிவடையச்செய்யும் போதைப்பொருட்கள் அவர்களின் உடல் வலிமையை தளர்வடையச் செய்துவிடும் என் பதில் மாற்றுக்கருத்துக்களே யில்லை. இத்தேசத்தில் எதனை கட்டியெழுப்புவதற்காக நாம் முயற்சிக் கின்றோம் என்பதில் தற்போது பலவினாக்கள் முன்வைக்கப்படுகின்றன.

வடபகுதியில் இவ்வாறு போதைப்பொருள் வர்த்தகத்தை அதிகரிக்கும் காரணிகள் முழுமையாக இனங்காணப்பட்டு அதற்கான தீர்வு கண்டறியப்படுதல் அவசியமானதாகும். இதனைவிடகேரளக்கஞ்சாவிற்கு வடபகுதியை சந்தைப்பாலமாக (Marketing niche or Marketing Chain) மாற்றியதன் தேவை என்ன? எவ்வாறு இது பயனாளிகளுக்கு அறிமுகப்படுத் தனையோ போரார்ட்டங்களுக்குள் உள்ளாகி ஒரு வேளை உணவைப்பெற முடியாமல் தவிக்கும் எமது தேசத்து மக்களுக்கு உணவளிக்க முடியாமல் திண்டாடும் எமக்கு எமக்கே

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

222

வும் சிறப்பாக திருப்தியாக இருந்ததை சுட்டிக்காட்டலாம்.

இவற்றுடன் சேர்த்து உணவுற்பத்தி மற்றும் அதனை மக்களுக்கு கிடைக்கச் செய்வதான வழங்கல் சங்கிலி (Supply Chain) ஆங்காங்கே சீரற்றதாக காணக்கிடைத்தாலும் விவசாய பெருமக்களின் உற்பத்திப் பொருட்கள் ஓரளவிற்கு பழையபடி சந்தைப்படுத்த முயற்சிகள் கைகூடி வருகின்றதனை காண முடிகின்றது. இருப்பினும் இந்த சந்தை வாய்ப்பு ஒரு சீரற்றதாக அவ்வப்போது மாற்றமடைந்து கொண்டிருப்பதனால் விவசாயியினால் அதனை மையப்படுத்தி உற்பத்தியைத் தொடர முடியாதிருக்கின்றது.

ஒருவருட காலத்தில் எதிர்பாராத மாற்றங்களை சந்தைப்படுத்தல் உள்வாங்கிக் கொண்டிருப்பதனால் உற்பத்தியின் இலாபத்தை உற்பத்தியாளன் முழுமையாகப்பெற முடியாதிருப்பதனால் இந்த தொழிலில் நிச்சயமற்ற தன்மையை உருவாக்கி விட்டுள்ளது. இது இன்று நேற்றல்ல காலங்காலமாக உருவாக்கப்படும் மற்றும் அமுல்படுத்தப்படும் உணவுற்பத்திக் கொள்கைகள். (Food Policies) உற்பத்தியாளனை பாதுப்பதில்லை என்பதனை அவற்றின் நடைமுறைப்படுத்தல்களிலுள்ள தளர்வுகளிலிருந்து கண்டு கொள்ளலாம். எந்த உணவுற்பத்தியை மையப்படுத்திய கொள்கைகளாயினும் இந்த விடயத்தில் சறுக்கல்களை கண்டிருந்தமைகண்கூடு.

மாறாக தற்போது இவ்வளவு சிரமப்பட்டு உணவுற்பத்தி செய்வதிலும் பார்க்க போதைப் பொருள் விற்பனை அனைத்து மக்களையும் மிரள வைத்திருக்கின்றதை என்னவென்பது. அதிகம் அலட்டிக்கொள்ளாமல் உடல் நோகாமல் இவ்வாறான விதம் விதமான போதைப் பொருட்களின் இருப்பும் அதனைப் பயன்படுத்துபவர்களின்





வர்த்தகம் குறிவைக்கப்பட்டிருப்பதால் பெற்றோர்களாகிய நாங்கள் மிகவும் அவதானமாகவும் கவனமாகவும் இளையவர்களை பாதுகாக்க முயல வேண்டும். போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு எமது அறிவுரைகள் எப்போதும் இனிப்பான செயற்பாடாக இருக்காது. அதேநேரத்தில் அவர்களைக் கண்காணிப்பதும் இன்னும் அதனுள் முழுமையான அடிமைகளாக மாற விடாது தடுப்பதும் மிகவும் கடினமான செயற்பாடாகும்.

கஞ்சா கடத்தலின் மையமாக வடபகுதியிருப்பதும் இவ்வருடத்தில் 2.327 கிலோகிராம் கேரளக் கஞ்சா இவ்வருடத்தில் கைப்பற்றப்பட்டதென்னும் நேற்றைய செய்தி எமது எதிர்கால இருப்பை மேலும் கேள்விக்குறியாக்கி விட்டிருக்கின்றது. உணவுற்பத்திக்காகவும் உணவு கிடைக்காமலும் மக்கள் தினம் தினம் அல்லாடிக்கொண்டிருக்கும் இந்த தேசத்தில் கேரளக் கஞ்சாவின் இருப்பு இப்படியிருக்கின்றது என்றால் இதன் உற்பத்தி. அதனை எமது பிரதேசத்திற்குள் கொண்டுவருபவர்கள் மற்றும் இதனை எம்மவர்களுக்கு விற்ற அவர்களை போதையின் இனங்கண்டு அதனை முழுவதுமாக முறியடிக்க செயல் வடிவங்கள் விரைந்து தயார்படுத்தப்படல் அவசியமாகும்.

நோய் எதிர்ப்புசக்தி (Immunity)நலிவடைந்ததனால் கொரோனா இலகுவில் மக்களைத் தாக்குகின்றது என மருத்துவ உலகு அடித்துக் கூறினாலும் தொடர்ச்சியாக போதைப் பொருளின் பயன்பாட்டிலிருப்பவருக்கு உடலெதிர்ப்பு சக்தி நலிவடையும் என தெரிவிக்கப்பட்டும் உள்ளது. நாமாகவே உடலின் எதிர்ப்பு சக்தியை போதைப் பொருள் பயன்பாட்டினால் நலிவடையச் செய்யும் போது நிச்சயமாக விரைந்து கொரோனா வைரஸ் தாக்கம் எற்பட வாய்ப்பாகி விடுகின்றது. உள்ளெடுக்கும் உணவினால் எமது எதிர்ப்பு சக்தியை தக்க வைத்துக் கொள்ளவே மிகவும் சிரமப்படும் போது போதைப் பொருளின் பயன்பாட்டினால் உருவாக்கும் கொஞ்சநஞ்ச எதிர்ப்பு சக்தியையும் எமது இளைய சந்ததி இழக்கும் போது அது விரைந்து நோய்த்தொற்றுதலை ஊக்குவித்துவிடும். இந்த அபாய கட்டத்திலிருந்து நாம் மீள்வதற்கான வசதி வாய்ப்புகள் உடனடியாக ஆரம்பித்தல் தப்படுகின்றன. தெரிந்தா தெரியாமலா இவ்வாறான போதைப் பொருட்கள் எம்மவர்களின் அவசிய பயன்பாட்டுப் பண்டமாக மாறியிருக்கின்றது? போதைப் பொருட்கள் பற்றிய மற்றும் அதனாலேற்படும் விளைவுகளை அதற்குரிய திணைக்களம் மக்களுக்கு தெரியப்படுத்தியும் இன்னமும் இதுவிடயத்தில் எமது கவனயீனம் இருப்பதாக அனுமானிக்க முடிகின்றது.

பயிர் செய்வதற்குப் பதிலாக போதைப்பொருள் வர்த்தகத்தில் விரைந்து பணம் சம்பாதிக்கலாம் என்னும் தவறான உதாரணங்களை எமது இளையவர்கள் முன்னிறுத்த முனைவதனையும் இதுவிடயத்தில் அவதானிக்கலாம். அத்துடன் போதைப் பொருள் வைத்திருப்பது. அதனை இன்னொருவருக்கு பகிர்ந்து அதன்மூலம் இலகு வழியில் பணம் பெற முனைவது எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாத செயற்பாடுகளாகும். அவ்வாறாயின் இந்த தில்லுமுல்லு வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களை இனங்கண்டு அவர்கள் தொடர்ந்து இந்த வர்த்தகத்தில் ஈடுபடாதவாறு தடுப்பதும் எமக்கான கடமைகளாகும். எத் தெரியாமல் எமது இளம் சந்ததியை காவுகொள்ள இப்படியொரு அந்நியச்க்தி அயல் நாட்டில் உருவாகி கேரளக் கஞ்சா என்னும் பெயரில் எமது தேசத்தை ஆக்கிரமிக்க தொடங்கியிருப்பது கொரோனாவின் தாக்கத்தைவிட பாரதூரமானதாகும்.

உணவுற்பத்தியில் வழங்கல் சங்கிலிகளை அதிகரித்து உணவு அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என போராடிக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் இவையெதனையும் தாண்டி இலகுவாக இந்த வர்த்தகம் எமக்குள்ளேயே எம்மையும் அறியாமல் பரவிக்கொண்டிருக்கின்றது. நாம் உலக சந்தையை மையப்படுத்தி அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும் போது எமது தேசத்தை சிறந்த சந்தையாக பயன்படுத்தும் போதைப் பொருள் வர்த்தகத்தின் பரிணாம வளர்ச்சியை என்னவென்பது.

உணவுற்பத்தி சிறக்க. மக்களை போதையடிமைத்தனத்திலிருந்து காக்க. எமது மக்களின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க. அதற்கான பாரம்பரிய உணவுப்பழக்கத்தை மீண்டும் திரும்பிப் பார்க்க கொரோனா போன்றதொரு கொடிய வைரஸ் வந்திருக்கின்றதென்றேகருதலாம்.

விதம்விதமான போதைப் பொருட்களின் கூடாரமாக எமது தேசத்தை தாரவார்த்துக் கொடுக்காது நாம் அனைவரும் இதில் விழிப்பாக இருந்து இந்த வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களையும் அவர்களுக்கு போதைப் பொருட்களை வழங்குநர்களையும் இனங்கண்டு அவ்வாறான தகவல்களை பாதுகாப்பு துறைக்கு தெரிவித்து இந்த வழங்கல் சந்தையை முற்றுமுழுதாக அறுத்தெறிய அனைவரும் ஒன்றுசேர வேண்டும். இது வெறுமனே எழுதப்பட்டதல்ல. அனைவரும் உணர்ந்து எமது வருங்கால சந்ததியைக் காப்பாற்ற செய்கின்ற கடமையென புரிந்து கொள்வோம்.



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

கலாநிதி முருகர் குணசிங்கம்

19

2009 மே மாதத்தில் ஈழ விடுதலைப் போராட்டம் முடிவுக்கு வந்ததாக இலங்கை அரசு அறிவித்த பிறகு அகதிகளாக அவுஸ்திரேலியாவுக்கு வந்த ஈழத்தமிழர்கள் தொகையை அறிய எதுவித வாய்ப்புகளும் இல்லை.

ஆனால் அதிகாரபூர்வமற்ற ஆதாரங்களின் ஊடாக சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமான ஈழத்தமிழர்கள் அகதிகளாக அவுஸ்திரேலியா வந்து இருக்கலாம் என அறிய முடிகின்றது. இந்த எண்ணிக்கை சரியானது என்று கூற முடியாது.

**நியூசிலாந்து**

1972 இல் நியூசிலாந்தின் தொழிற் கட்சி அரசு (Labour party) அதுவரை இறுக்கமாக இருந்த குடிவரவுக் கொள்கையைத் தளர்த்தியது. இதன் விளைவாக 1973-1995 இற்கு இடையில் பல்வேறு நாடுகளில் இருந்து சுமார் 1,00,000 பேர் நியூசிலாந்துக்கு வந்து குவிந்தனர்.

அந்நாட்டில் நிலவிய அமைதியான அரசியல் சூழ்நிலை நல்ல பொருளாதார வளம், வேலைவாய்ப்புகள், ஆங்கிலக் கல்வி வசதி, நல்ல காலநிலை, தரம் வாய்ந்த மருத்துவ வசதி, வசதியான வாழ்க்கை, உயர்ந்த ஊதியம், ஓய்வு ஊதியம் போன்றவை ஈழத்தமிழர்களை ஈர்க்கின்ற காரணிகளாக அமைந்தன.

நியூசிலாந்து சனத்தொகைக் கணக்கெடுப்பு இலாகாவின் தரவுகளின்படி 1972-1976 இடைப்பட்ட காலத்தில் 744 ஈழத்தமிழர்களே நியூசிலாந்துக்குப் புலம்பெயர்ந்து சென்றிருந்தனர்.

1977, 1979, 1981 ஆண்டுகளில் சிங்கள அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளுக்குப் பிறகு ஈழத்தமிழர்கள் பல்வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றதைப் போல நியூசிலாந்துக்கும் செல்லத் தொடங்கினர்.

1984 இல் நியூசிலாந்தில் பொருளாதார சீர்திருத்தம் காரணமாக திறமை வாய்ந்த பயிற்சி பெற்ற படித்தவர்கள் நியூசிலாந்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்பட்டதால் குடிவரவுக் கொள்கையில் தாராளப் போக்கு கடைப்பிடிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட தள்ளும் காரணிகளும் இழுக்கும் காரணிகளும் தகுதி வாய்ந்த ஈழத்தமிழரை நியூசிலாந்து நோக்கிக் குடிபெயர வைத்தது.

அத்தோடு வணிக வளர்ச்சி குடும்ப மீள் இணைப்பு (Family Reunion) ஆகியவையும் ஈழத்தமிழர்கள் பலரை நியூசிலாந்திற்குச் சென்று குடியேற வைத்தது.

அகதி என்ற தகுதியும் பெறக் கூடியதாக இருந்தது. ஆயினும் அவுஸ்திரேலியா அல்லது கனடா மேலும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் போல் அகதி அந்தஸ்து பெறுவது இலகுவாகக் காணப்படவில்லை.

2011 இல் ஆயிரத்திற்கும் குறைவான ஈழத்தமிழர்களை மட்டுமே நியூசிலாந்து அரசு அகதிகளாக ஏற்றுக் கொண்டது என்பதை அதிகாரபூர்வமற்ற ஆதாரங்களின் ஊடாக அறிய முடிகின்றது. மேற்கூறப்பட்ட பின்னணியில் நியூசிலாந்திற்குச் சென்று குடியேறிய ஈழத்தமிழர்கள் எண்ணிக்கை பற்றி 2013 இறுதியில் இந்நூலாசிரியர் ஆய்வு செய்தபோது 2013 இற்கான குடிசன மதிப்பு விபரம் கிடைக்கப் பெறவில்லை.

எனவே 2006 குடிசன மதிப்பு புள்ளி விபரங்களின்படி 5540 ஈழத்தமிழர்கள் நியூசிலாந்தில் வாழ்வதாக அறிய முடிகிறது.

இவர்களுள் பெரும்பான்மையினர் ஆக்லாந்து (Auckland) நகரத்தில் வசிப்பதாகவும் தலைநகர் வெல்லிங்டனில் (Wellington) மிகக் குறைந்த அளவில் வசிப்பதாகவும் அறிய முடிகின்றது.

**மேற்கு ஐரோப்பிய நாடுகள் பிரித்தானியா**

இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான சமூக, சமய, கலை, கலாசார, கல்வி, தொழில், பொருளாதார, அரசியல் தொடர்புகள் இரண்டு நூற்றாண்டுக் காலத்திற்கும் மேலானவை.



1795 ஆம் ஆண்டு டச்சுக்காரரிடம் இருந்து இலங்கையைப் பிரித்தானியப் பேரரசு தனது பிடிக்குள் கொண்டுவந்தது.

1830களில் கோல்புறூக் அரசியல் யாப்புச் சீர்திருத்தக் குழுவினரைக் கொண்டு இலங்கையில் தமக்கு ஏற்ற அரசியல் யாப்பை முதன்முதலாக வரைந்தது.

அதனைத் தொடர்ந்து தமது பொருளாதார நலன்களுக்காக இலங்கையில் அதுவரையில் மேற்கொள்ளப்பட்ட நிர்வாக அமைப்பு முறையை மாற்றியது.

அதுவரை தமிழர்களின் தாயகப் பகுதிகளான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தனித்தனி நிர்வாக அமைப்பின்கீழ் பரிபாலிக்கப்பட்டு வந்தன.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சியிலுங்கூட அந்த நிலைமையே தொடர்ந்து நீடித்தது.

1833 இற்குப் பிறகு பிரித்தானியர் வடக்கு, கிழக்கு தமிழ் மாகாணங்களைச் சிங்கள மாகாணங்களோடு இணைத்து இலங்கை முழுவதையும் ஒரே நிர்வாக அலகினுள் கொண்டு வந்தனர்.

இம்மாற்றமே ஈழத்தமிழர்களின் அரசியல் தலைவிதியைப் பல்வேறு கோணங்களில் சீரழிக்க அடிப்படைக் காரணமாக இருந்தது.

மேலும் ஏற்கனவே முன்னுரையில் குறிப்பிடப்பட்டதுபோல் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டதுபோல பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் என 1920 இல் இடம்பெற்ற மனிங்சீர்திருத்தம் (Manning), 1931 இல் இடம்பெற்ற டொனமூர் அரசியல் சீர்திருத்தம் (Donoughmore), இறுதியான 1945 இல் இடம்பெற்ற சோல்பரி அரசியல் சீர்திருத்தம் (Soulbury) என்பன தொடர்ச்சியாக தமிழர்களின் அரசியல் தலைவிதியைப் பல்வேறு வடிவங்களில் சீர்குலைத்ததையே காண முடிகின்றது.

பிரித்தானியர் இலங்கைக்கு 1947 இல் விடுதலை வழங்க முன்வந்த போது தமிழர்கள் வரலாற்றுக் காலம் தொடக்கம் ஆட்சி செய்த வடக்கு-கிழக்கு தமிழர் பாரம்பரியத் தாயகப் பகுதிகளைத் தமிழரிடம் கையளித்து இருக்க வேண்டும்.

போர்த்துக்கீசரான அந்நிய ஆட்சியாளர் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி செய்தபோது தமிழர்களின் வடக்கு, கிழக்கு மாகாணங்களாகிய தமிழர் பிரதேசம் யாழ்ப்பாண இராச்சியத்துக்கு உட்பட்டுத் தமிழர்களால் ஆளப்பட்டு வந்தது.

எனவே பிரித்தானியர் நாட்டை விட்டு வெளியேறும் போது மேற்படி பிரதேசத்தை தமிழர்களிடம் அல்லவா கொடுத்து விட்டுச் சென்று இருக்க வேண்டும் என்பதே சாதாரணமாக ஒருவருக்கு எழும் கேள்வி ஆகும்.

1947 இல் 70 வீதத்திற்கு மேல் பெரும்பான்மைப் பலங்கொண்ட சிங்களவரிடம் இலங்கை முழுவதையும் தாரை வார்த்துக் கொடுத்தமையே கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாக அமைந்து இருக்கின்றது.

ஒட்டுமொத்தத்தில் பிரித்தானிய அரசு செய்த பாரிய வரலாற்றுத் தவறே ஈழத் தமிழர்கள் இன்று உலகம் முழுக்க அகதிகளாகச் செல்லும் நிலைமையை ஏற்படுத்தியது.

எனவே அதற்கான தார்மீகப் பொறுப்பைப் பிரித்தானியாவே ஏற்க வேண்டும். இலங்கையை விட்டு வெளியேறிய போதும் இலங்கையுடனான பிரித்தானிய அரசின் பொருளாதார இராஜதந்திர உறவுகள் பொதுநலவாய நாடுகள் அமைப்பினுள் இலங்கை இருப்பதால் இன்று வரை தொடர்கின்றன.

ஈழத்தமிழர்களின் பிரித்தானியா நோக்கிய புலம்பெயர்வு பிரித்தானியர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தின் நடுப்பகுதியாகிய 1850களில் இருந்து தொடங்குவதைப் பார்க்க முடிகின்றது.

ஆனால் 1950 வரையான ஒரு நூற்றாண்டுக் காலத்திற்குள் எத்தனை ஈழத்தமிழர்கள் எவ்வாறு பிரித்தானியாவிற்குப் புலம்பெயர்ந்து சென்றார்கள் என்பது பற்றிய விபரங்கள் ஆய்வுக்கு உரியவையாகக் காணப்படுகின்றன.

கடந்த ஐந்து தசாப்தங்களாக இலங்கையின் அரசியல் நிலைமைகளாலும் ஐக்கிய இராச்சியத்தின் குடிவரவுக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களாலும் பல ஈழத்தமிழர்கள் வேலைவாய்ப்பு, உயர்கல்வி காரணமாக 1950 களில் இருந்து பிரித்தானியாவில் குடியேறுவதைக் காண முடிகின்றது.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல தமிழ் இளம் தலைமுறையினர் மருத்துவத் துறையில் தமது கற்கைகளை மேற்கொண்டனர்.

குறிப்பாக யாழ்ப்பாணம் மானிப்பாயில் தொடங்கப்பட்ட கிறீன் (Green Hospital) வைத்தியசாலையும் அதன் கல்விச் சேவையும் மருத்துவச் சேவையும் சிறந்து விளங்கின.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வசதி படைத்த குடும்பத்தினர் தமது பிள்ளைகளைப் பிரித்தானியப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி மருத்துவத்துறையில் பட்டம் பெறவும் வைத்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் 1950 களில் பிரித்தானியா தேசிய சுகாதார சேவைகள் (National Health Service) நிறுவனம் இலங்கையில் உள்ள மருத்துவர்கள் பிரித்தானியாவிற்கு வந்து மருத்துவச் சேவை செய்வதற்கான வாய்ப்புக்களை வழங்கியது.

இதன் விளைவாகப் பல தமிழ் வைத்தியர்கள் பிரித்தானியாவுக்குச் சென்று மருத்துவ சேவை புரிந்து அங்கேயே நிரந்தரமாகக் குடியுரிமையும் பெற்றுள்ளனர். (தொடரும்)

# மேதானந்த தேரருடைய கருத்துக்கள் சைவத் தமிழர்களின் மனதை புண்படுத்துகின்றது

## அகில இலங்கை சைவ மகா சபை வேதனை

(யாழ்ப்பாணம்)

**அண்மைய நாட்களாக கிழக்கு தொல்லியல் செயலணிக்கு நியமிக்கப்பட்ட மேதானந்த தேரர் தமிழர்களுடைய இந்த நாட்டினுடைய பூர்வீக புராதன சமயமான சைவத்தினுடைய ஆதி வழிபாட்டு இடமும் பாடல் பெற்ற தலமும் மாமன்னன் இராவணனுடைய காலத்திலேயே இருந்த ஈச்சரமுமான திருக்கோணேச்சரத்தை விகாரை அமைந்திருந்த இடம் எனக் கூறியதும் தொடர்ந்து நல்லூர் முருகன் ஆலயம் தொடர்பாக குறிப்பிட்டிருப்பதும் தமிழர்களை மிகவும் மனவேதனைக்கு உள்ளாக்கியுள்ளது என அகில இலங்கை சைவ மகாசபை கவலை வெளியிட்டுள்ளது.**

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. இராவண் வெட்டு போன்ற மிகப் பண்டைய அடையாளங் களையும் பின்னர் குளக்கோட்ட மன்னனுடைய திருப்பணி செய்திகளையும் கொண்டதும் 1500 ஆண்டுகளுக்கு முன்னரே தாய் தமிழகத்திலேயே பெரி தும் அறியப்பட்ட போற்றப்பட்ட திருக்கோவிலாக இருந்தமையால் அங்கிருந்தே திருஞான சம்பந்த நாயனாரால் பாடப்பெற்ற தலமாக திருக்கோணேச்சரம் விளங்குகின்றது.

இந்த நாட்டில் குடியேறி சிங்கள இனத்தை தோற்றுவித்த முன்னோடியான விஜயன் வருகையின் போதே திருக்கோணேச்சரம் உள்ளிட்ட பஞ்ச ஈச்சரங்கள் இருந்ததாகவும் அங்கு சென்று விஜயன் வழிபட்டதாகவும் மகாவம்சமே ஒத்துக்கொள்கின்றது.

மூத்த சிவனின் மகனாகிய தேவநம்பியதீசன் கி.மு.243 இல் பௌத்த மதத்திற்கு மதம் மாறும் வரை இந்த இலங்கை திருநாடு முழுவதும் சைவ சமயமே பின்பற்றப்பட்டது என்கின்ற வரலாற்று உண்மையை பௌத்த தேரர் மனங்கொள்வது நல்லது.

திருமூலரால் சிவபூமி என்று அழைக்கப்பட்ட இந்த நாட்டில் ஒரு காலத்தில் சிவ வழிபாடு மட்டுமே எங்கும் பரந்து வியாபித்து இருந்தாலும் இன்று காலங்காலமாக ஏற்பட்ட பல்வேறு மத மாற்றங்கள் அந்நியர் வருகைகளால் பல மதங்கள் தோற்றுவிக்கப்பட்டு சைவத்தின் பல புராதன சிவாலயங்கள் அழிக்கப்பட்டும் மாற்றியமைக்கபட்ட போதிலும் சைவத் தமிழர்களிடைய வாழ்விடங்கள் பறிக்கப்பட்ட போதிலும் அவற்றை மீள உரிமை கோராமல் மத நல்லிணக்கத்திற்கு ஊறுவிளைவிக்காமல் இருக்கும் ஒரு மக்கள் குழுமத்தை மீண்டும் மீண்டும் அனைவரும் சீண்டிப் பார்ப்பது எம் மக்களின் மனங்களில் ஆறாத் துயரை தோற்றுவிக்கின்றது.

ஆதலினால் இவ்வாறான கருத்துக்களை தொடர்ந்து தெரிவிப்பதை மேதானந்த தேரர் நிறுத்திக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுகாள்வதுடன் உண்மையையும் மத நல்லிணக்கத்தையும் நேசிக்கும் அனைவரும் சைவத்தமிழர்களாகிய நாட்டின் பூர்வீகக் குடிகளின் வழிபாட்டு தொன்மங்களை பாதுகாக்க உரித்து குரல் கொடுக்க வேண்டும் எனவும் அகில இலங்கை சைவ மகா சபை கேட்டு நிற்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-9)



( C-030 )

# காடுகளையும் வெளிநாடுகளுக்கு கொடுக்கும் அரசாங்கம்

## சம்பிக்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

**சுற்றுச் சூழலை பாதுகாப்பதாகக் கூறியே ராஜபக்ஷக்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். ஆனால் இலங்கையின் காடுகளை அமெரிக்காவிற்கு கொடுக்க அரசாங்கம் செயற்படுவதாக ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் சம்பிக்க ரணவக்க குற்றம்சாட்டினார்.**

கம்பஹாவில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் பதாகைகள் அச்சிடப்போவதில்லை என்றும் பட்டாசு கொளுத்துவதில்லை என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறினார். தான் சூழலை நேசிப்பவர் என்றும் கூறினார். ஆனால் கம்பஹா மாவட்டத்தில் பொதுஜன பெரமுனவுடைய பதாகைகள் எல்லா இடங்களிலும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. சூழலை நேசிப்பதாகக் கூறி காடுகளை வெட்டுவதற்கும் மணல் அகழ்வதற்கும் பொதுஜன பெரமுனவினருக்கு அனுமதியளித்துள்ளார்.

மணல் அகழ்வினால் களனி மற்றும் களுகங்கை என்பன முற்றாக சீரழிக்கப் பட்டன. அதனை தடுப்பதற்காக நாம் அனுமதிப்பத்திரங்களை வழுங்கினோம். ஆனால் தற்போது அவை இரத்துச் செய்யப் பட்டுள்ளன. சுற்றுச்சூழல் முற்றாக சீரழிக்கப்பட்டது. தேசிய சொத்துக்களை விற்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதைப் போன்று பாசாங்கு செய்யும் மகிந்த ராஜபக்ஷவே கந்தக் காடு பிரதேசத்தில் ஆயிரக் கணக்கான நிலத்தை வெளிநாட்டு கம்பனிகளுக்கு விற்றுள்ளார். அதேபோன்று மொனராகலை பிரதேசத்திலும் ராஜபக்ஷக்களே இடங்களை விற்பனை செய்தனர்.

அமெரிக்க கம்பனிகளுக்கு இவ்வாறு இடங்களை வழுங்கியதைப் போன்றே இலங்கையின் சுற்றுச் சூழலையும் விவசாயத்தையும் காட்டிக் கொடுப்பதற்கு முயற்சிக்கின்றனர் என அவர் குற்றஞ்சாட்டினார். (ஜ-4)

# ஜனாதிபதி கோட்டா கண்டிக்கு விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாளை கண்டிக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை வலுப்படுத்தும் வகையில் ஜனாதிபதியின் இந்த விஜயம் இருக்குமென ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் அங்கு நடைபெறவுள்ள பிரசாரக் கூட்டங்களில் ஜனாதிபதி கலந்து கொள்ள உள்ளார். (ஜ-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2069

### சர்வேஷ்

சும்மா இருக்கும் போது
ஒரு கோல் கூட வராது...



சார்ஜ் போட்டுட்டோ, சைலண்டிலயோ
போட்டுட்டு அப்புறம் போய் பாத்தா
19 மிஸ்டுகோல் இருக்கும்...

### ஹுதர்சினி



வாழ்க்கையில் பல
பேருக்கு நன்றி சொல்
சில பேருக்கு மிகவும்
நன்றி சொல்...
பல பேர் நம்
வாழ்க்கையில் பாடம்
கற்பிக்க
வந்தவர்கள்...
சில பேர் பாடமாகவே
வந்தவர்கள்...

### யுகேஷ்

வேலை கிடைக்கிற வரைக்கும்
வேலை கிடைக்கல்லையே என்று
கஷ்டமா இருந்துச்சு...



வேலை கிடைத்த பிறகு
வேலைக்கு போறதுக்கு கஷ்டமா இருக்கிறது...

### துர்ஷா



நினைவுகள்
எப்பொழுதும் சற்று
வித்தியாசமானது தான்
சிலநேரம்
சிரித்த நாட்களை
நினைத்து அழ வைக்கும்
சில நேரம் அழுத
நாட்களை
நினைத்து சிரிக்க
வைக்கும்...

### லதீப்


சாப்பிட்டியாப்பா என்பது
அம்மாவின் பாசமென்றால்



சாப்பிட்டானான்னு கேளு
என்பது அப்பாவின் பாசம்...!

### லகர்ஷ்

டாடி...எப்ப என்னைய LKG ல
சேர்த்து விடப் போறா???



முளைச்சு மூணு இலை விடல,அதற்குள்ள
என் சொத்தை அழிக்க முடிவு செய்துவிட்டியா...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பெண்களை மையப்படுத்தியே கொள்கைத் திட்டம் வெளியிடப்படும்



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளினால் பெண்களே பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். எனவே அவர்களின் பிரச்சினைகளை நாட்டுக்கு தெரியப்படுத்தும் நோக்கில் நாளை மறுதினம் திங்கட்கிழமை எமது கட்சியினால் பெண்களை மையப்படுத்திய கொள்கைத் திட்டம் வெளியிடப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியின் பெண்கள் தொடர்பான கொள்கைத்திட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை வெளியிடப்படவுள்ளது. கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வுகள் கொழும்பில் அமைந்துள்ள தாமரைத் தடாகத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது பெண்களுக்கு நலனைப் பெற்றுக்கொடுக்கும் வகையில், எமது ஆட்சியில் நாங்கள் மேற்கொள்ளவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் தெரியப்படுத்த இருப்பதுடன், இதன்போது கட்சியின் பெண் உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து கொள்ள எதிர்பார்த்துள்ளனர். இந்த நிகழ்வுகளில் நாட்டிலுள்ள பெண்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என தெரிவித்தார். (ஜ-4)



# ஆன்மீகம்

## ஒன்றையே பற்று, உறுதியாகப் பற்று!

(நேற்றைய தொடர்ச்சி)

பார்த்தனே. கட்டி வைத்திருக்கும் காக்கை பொம்மைக் குறியைப் பார்க்கின்றாயா? என்றார்.

**குருவே! குறி நன்றாகத் தெரிகின்றது என்றான் அர்ஜுனன்**

**கிளை தெரிகின்றதா?**

**இல்லை!**

**மரம் தெரிகின்றதா?**

**இல்லை**

**நான் தெரிகின்றேனா?**

**தெரியவில்லை குருவே!**

**இப்போது அந்தக் காக்கை தெரிகின்றதா?**

**தெரியவில்லை!**

**தெரியவில்லையா? அப்போது என்ன தெரிகின்றது?**

**காக்கையின் தலை மட்டும்தான் தெரிகிறது!**

**நல்லது! இப்போதும் தலை தெரிகிறதா!**

**இல்லை சுவாமி! தலையும் பறவையின் உடம்பும் தெரியவில்லை! கழுத்து மட்டும்தான் தெரிகின்றது!**

**அம்பைவிடு - என்றார் துரோணர்.**

வீரவிஜயன் அம்பை விட்டான். கீழே விழுந்தது காக்கைக் பொம்மை. அனைவரிடம் துரோணர் சொன்னார் குறி வைத்துப் பார்த்த உங்களுக்குக் கிளையும் தெரிகின்றது. மரமும் தெரிகின்றது.

நானும் தெரிகின்றேன் என்றால் கணையை எதன் மேல், யார் மேல் செலுத்த முடியும்! குறி பார்க்கின்ற உங்கள் கண்ணுக்கு மற்றவை தெரியலாமா? ஆயிரம் சோதனைகளும் அடுக்கடுக்கான பிரச்சினைகளும் வந்தாலும் இலட்சியத்தில் குறியாக வெறியாக இருப்பதே வெற்றியடையும் நெறி என்று விளங்கிக் கொள்வோம்! பத்து நாள் ஒன்றைப் பற்றுவது பதினோராம் நாள் அதை விட்டுவிட்டு வேறொன்றோடு சுற்றுவது என்றால் எந்த நாள் முற்றுவது நம்முடைய எண்ணங்கள் எல்லாம்! அசையாமல் ஒன்றில் அனுதினமும் ஈடுபடுபவன் கைகளில் வெற்றிக்கனி வந்து விழும் என்பது வெறும் ஜோதிடம் அன்று; வரலாற்று உண்மை! விவேகானந்தராக பின்னாளில் விளங்கிய நரேந்திரன் நேரடியாக இறைவனைப் பார்க்க வேண்டும் என்று எண்ணினான்.

மால் அறியா நான்முகனும் காணா மலையினை நாம் போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்! என்று திருவெம்பாவையில் மாணிக்கவாசகர் பாடுகிறார். கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர் என்கிறோம். இப்படிப்பட்ட நிலையில் உள்ள இறைவனைக் காண வேண்டும் என்ற இலட்சியம் எப்படி ஈடேறும்? கைகூடுகிற செயலா அது? ஆனால் அதுவோ நிறைவேறியதே! எப்படி அந்த எண்ணத்தில் வெற்றி பெற்றான் இளைஞன் நரேந்திரன் என்பதை அறிந்து கொள்வோமா? காவி உடுத்தி வந்த சாமியார்களின் காலடியில் எல்லாம் விழுந்தான் நரேந்திரன். அனைவரிடமும் அவன் கேட்ட கேள்வி:

கடவுளைத் தாங்கள் கண்டதுண்டா? எனக்கும் காட்டுகிறீர்களா? அனைவரிடமும் வந்த பதில்: எங்களால் இயலாது இசைவான பதில் எவரிடமிருந்தும் வரவில்லை. நாமாக இருந்தால் என்ன முடிவெடுப்போம்? இத்தனை சாமியார்களாலேயே இறைவனைப் பார்க்க முடியவில்லை என்றால் நாம் எங்கே பார்ப்பது? நம் எண்ணம் தவறானது. அவசரத்தில் - ஆர்வத்தில் வந்த ஆசை அது என்று திசை மாறியிருப்போம்.

ஆனால் நரேந்திரன் நம்பிக்கையை விட்டு விடவில்லை. குறியில் குறியாக இருந்தான். அவனுக்கென்றே குரு ராமகிருஷ்ணர் அமைந்தார். இலட்சியம் ஈடேறியது. இறைவனைப் பார்க்கும் எண்ணமே ஈடேறியது என்றால் நம் நம்பிக்கைகள் பழுக்காதா? ஒன்றை உறுதியாகப் பற்றினால் வெற்றித் தேவதை உன் கரங்களைப் பற்றி முத்தம் இடுவாள் என்பதே முன்னோர்களின் அனுபவங்கள் மொழியும் உண்மை!

# செய்தித்துளிகள்

## 45 பேர் சுய தனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் ஆலோசகராக சேவையாற்றிய பெண் ஒருவர் மாரவில பிரதேசத்தில், விடுமுறைக்காக வீடு திரும்பியிருந்த நிலையில் நேற்று முன்தினம் காலை கொரோனாத் தொற்றுக்குள்ளானவராக இனங்காணப்பட்டார்.

இதனையடுத்து இவருடன் தொடர்புடையவர்கள் தொடர்ச்சியாக பி.சி.ஆர்.பரிசோதனையை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்திருந்தது.

இதற்கமைய குறித்த பெண்ணுடன் உறவை பேணிய 10 குடும்பங்களைச் சேர்ந்த 45 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ஜ-4)

## சுங்கப்பிரிவு பறிமுதல் செய்த வாகனங்கள் அரச நிறுவனங்களுக்கு

(கொழும்பு)

இலங்கை சுங்கப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களை அரச நிறுவனங்களின் பயன்பாட்டுக்கு வழங்க பிரதமர் மகிந்த ராஜபக்ஷ முன்வைத்த அமைச்சரவைப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரச நிறுவனங்கள் மற்றும் இராணுவத்தினருக்கு இந்த வாகனங்கள் வழங்கப்படவுள்ளன.

வாகனங்கள் தேவையான அரச நிறுவனங்கள், இலங்கை சுங்கப்பிரிவிற்கு எழுத்துமூலமான கோரிக்கை விடுக்க வேண்டும் என அமைச்சரவை இணை ஊடக செய்தித் தொடர்பாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார். (ஜ-4)

## பொலிஸார் மீள் சேவையில் இணைப்பு

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் (விசேட அதிரடிப் படையினர் உள்ளிட்ட) சேவை விலகல் கட்டளை வழங்கியுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களை மீளவும் சேவையில் இணைத்தல் தொடர்பாக அரசாங்கம் மேற்கொண்டுள்ள் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கமைய குறித்த உத்தியோகத்தர்களை மீளவும் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான செயன்முறைகள் பாதுகாப்பு அமைச்சால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அது தொடர்பான விபரங்கள் www.defence.lk மற்றும் www.police.lk இணையத்தளங்கள் வாயிலாகப் பெற்றுக் கொள்ள முடியும். (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 140 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 140 | 180 | 250 |
| தக்காளி | 130 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 110 | 100 |
| கோவா | 150 | 120 | 140 |
| கரட் | 120 | 140 | 160 |
| பூசணி | 40 | 40 | 50 |
| புடோல் | 50 | 60 | 120 |
| வாழைக்காய் | 140 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 240 | 200 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 100 |
| பாகற்காய் | 180 | 220 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 80 | 60 | 80 |
| லீக்ஸ் | 150 | 140 | 120 |
| பீற்றூட் | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 180 | 240 | 240 |
| முருங்கைக்காய் | 150 | 140 | 160 |
| போஞ்சி | 160 | 140 | 150 |
| கத்தரிதம்புள்ள | 50 | -- | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 60-80 |
| இராசவள்ளி | -- | 300 | 280 |
| வெங்காயப்பூ | 220 | -- | -- |
| முள்ளங்கி | 80 | -- | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | 60 |




## குகையுடன் பேசிய நரி

ஒரு காட்டில் கிரகிரன் என்ற சிங்கம் வாழ்ந்து வந்தது. ஒருநாள் இரை தேடி காட்டின் பல பகுதிகளிலும் அலைந்து திரிந்தும் அதற்கு ஒரு சிறிய இரைகூடக் கிடைக்கவில்லை.


வழியில் ஒரு பெரிய குகையினைக் கண்டது. உடனே, சிங்கத்திற்கு ஒரு யோசனை... பேசாமல் நாம் இந்தக் குகைக்குள் ஒளிந்து கொண்டால், இந்தக் குகையில் இருக்கும் விலங்குகள் இரைதேடி விட்டுத் திரும்பி மீண்டும் இங்கே தானே வரும்.

அப்படி வரும் விலங்குகளை பிடித்து உண்டு விடலாம் என்று நினைத்து அந்தக் குகைக்குள் சென்று படுத்துக் கொண்டது.

அந்தக் குகையில் அவிபுச்சன் என்கிற ஒரு புத்திசாலியான நரி வசித்து வந்தது. தன் குகைக்குத் திரும்பி வந்து குகைக்குள் நுழைய முனைந்த போது வாசலில் சிங்கத்தின் காலடித் தடங்கள் இருப்பதனைப் பார்த்து குகைக்குச் சிங்கம் ஒன்று வந்திருக்கிறது என்பதை அறிந்து கொண்டது.

ஆனால் நரிக்கு ஒரு சந்தேகம்? சிங்கம் உள்ளே இருக்கிறதா? அல்லது சென்று விட்டதா? என்பதைத் தெரிந்து கொள்வதற்க்க குகைக்கு வெளியே நின்றுகொண்ட நரி, 'ஏய், குகையே! ஏய், குகையே!' என்று அழைத்தது.

சிங்கம் எழுந்தது. வெளியே ஒரு நரி இருப்பதனை அறிந்து கொண்டது. அது யாரிடம் பேசுகிறது என்று கவனித்தது.



நரி மீண்டும், 'ஏய், குகையே ஏன் மௌனமாக இருக்கிறாய்?' என்றது. சிங்கத்திற்கு ஒன்றும் புரியவில்லை. 'ஏன் இந்த நரி குகையிடம் பேசுகிறது?' என்று யோசித்தது.

நரி, 'குகையே என் மீது ஏதும் கோபமா? நீ தினமும் என்னிடம் பேசுவாயே? இன்று ஏன் என்னுடன் பேசாமல் அமைதியாக இருக்கிறாய்?' என்று கேட்டது.

அப்போதுதான் சிங்கத்திற்குப் புரிந்தது. 'அடடா! இந்தக் குகை தினமும் நரியுடன் பேசக்கூடியது போலும் ஆனால், இன்று ஏனோ இது பேசவில்லை' என்று நினைத்தது.

நரி, 'ஏய், குகையே! நீ பேசிய பின்னர்தானே நான் உன்னுள் நுழைவேன். இன்று நீ பேசாமல் இருந்தால் நான் எப்படி உன்னுள் நுழைவேன்?' என்றது.

சிங்கம் பதறிப் போனது. 'அடடா! குகை பேசினால்தான் நரி குகைக்குள் வருமாமே! நரி குகைக்குள் வராவிட்டால் நமக்கு இரை கிடைக்காதே! என்று நினைத்த சிங்கம் குகை போல பேசினால், அந்த நரி குகைக்குள் வந்து விடும். நாமும் அதை அடித்துச் சாப்பிட்டு விடலாம் என்று நினைத்து.

ஏய் நரியே! நான் வேறு சிந்தனையிலிருந்ததால் உன்னுடன் பேசவில்லை. தவறாக நினைக்காதே. வா உள்ளே! என்று குகை பேசுவது போல பேசி குரலெழுப்பியது. அவ்வளவு தான், குகைக்குள் இருந்து சிங்கத்தின் குரல்வெளிவந்ததும் சுதாகரித்துக் கொண்ட நரி, தப்பித்தோம் பிழைத்தோம் என தலை தெறிக்க ஓடிப் போனது.

நீதி: எதனையும் செய்வதற்கு முன்பு ஆலோசித்து செய்ய வேண்டும்.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## வீரப்பரம்பரை

③

எப்படி, இரண்டாம் நூற்றாண்டில் கர்நாடகவிலிருந்து களப்பிரர்கள் தமிழ்நாட்டுக்குள் நுழைந்தார்களோ, அதுபோல இவர்களும் கர்நாடகவிலிருந்து தமிழ்நாட்டுக்குள் நுழைந்து தஞ்சையைக் கைப்பற்றியவர்கள்.

ஆறாம் நூற்றாண்டில் பெங்களூர், கோலார் பகுதிகளை ஆண்டவர்கள் கொங்கனி கங்கர்கள் என்றழைக்கப்பட்டார்கள். இவர்கள் தங்களை முத்தரசர் என்று கூறிக் கொண்டார்கள்.

அதாவது, மூத்தகுடி மக்கள் என்று அர்த்தம். அதுவே பின்னர், முத்தரையர் என்று ஆனது. ஆக, கர்நாடகத்தைச் சேர்ந்த கங்க அரசர்களே முத்தரையர்கள் ஆவார்கள்.

முத்தரையர்களைத் தமிழ் முதுகுடிமக்கள் என்று நம் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. கொங்கனி, பெங்களூர், தலைக்காடு, கோலார் பகுதிகளை ஆண்ட இவர்கள் தமிழகத்தைச் சேர்ந்த பல்லவ அரசர்களோடு நல்ல நட்போடு இருந்தார்கள். (கி.பி.550 இல் கொங்கனிப் பகுதியை ஆண்ட துர்விநீதன் என்கிற கங்க அரசரின் மனைவி சோழ இளவரசியாவாள்).



பல்லவர்களின் ஆதரவினால் தமிழகத்துக்குள் நுழைந்த முத்தரையர்களுக்கு பல்லவப் பேரரசுவின் கீழ் இருந்த தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, பழைய புதுக்கோட்டை சமஸ்தானம் ஆகிய நிலப் பகுதிகளின் குறுநில மன்னர்களாகும் வாய்ப்புக் கிடைத்து. காஞ்சியில் ஏதாவது ஆபத்து வந்தால் தஞ்சம் புகலாம் என்பதற்காக தமக்குண்டான பகுதிகளை முத்தரையர்களை விட்டு ஆளச் செய்தார்கள் பல்லவர்கள்.

தஞ்சையில் முத்தரையர்கள் ஆட்சி செய்து வந்தாலும் அவர்கள் பல்லவர்களின் கட்டுப்பாட்டுக்குள் தான் இருக்க வேண்டியிருந்தது. ஒருபோதும் தம்மை மீறி அவர்கள் செயற்படப் பல்லவர்கள் வாய்ப்புக் கொடுத்ததே இல்லை. முத்தரையர்கள், தஞ்சையில் இருந்து கொண்டு காஞ்சிப் பல்லவர்களுக்கு வரி செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

தமிழர்கள் என்றாலும் எப்படி கர்நாடகத்தைச் சேர்ந்தவர்களுக்கு இப்படியொரு வாய்ப்புகளைப் பல்லவர்கள் அளிக்கலாம். இது பெரிய ஆபத்தல்லவா? நிச்சயம் கேள்வி எழலாம்.

ஏற்கனவே தமிழகத்தில் களப்பிரர்கள் ஆண்ட காலத்தை யாரும் மறந்துவிடவில்லை. சேரர், சோழர், பாண்டியர் என மூன்று பேரும் நிலை குலைந்து போன காலகட்டம் அது.

ஆனால் பல்லவர்கள், முத்தரையர்களைத் தமது இன்னொரு போர்ப்படையாகவே பார்த்தார்கள். அவர்கள் தமக்குத் துரோகம் விளைவிப்பார்கள் என்று பல்லவர்கள் கனவிலும் நினைக்கவில்லை.

ஆனால் துரோகம் இல்லாத வரலாறு ஏது? ஒரு கட்டத்தில் பல்லவர்களுக்கு எதிராகவே திரும்பினார்கள் முத்தரையர்கள். அது திருப்புறம்பயம் போரின்போது நிகழ்ந்தது.

காவிரியின் கிளை நதிகள் காவிரியின் தெற்கே பிரிகின்றன. கொள்ளிடத்தில் இருந்து பிரிந்து காவிரிக்கும் கொள்ளிடத்துக்கும் நடுவில் பாயும் நதி மணியாறு.

இந்த மணியாற்றின் வடகரையில் திருப்புறம்பயம் என்கிற கிராமத்தில் பாண்டியர்களுக்கும் பல்லவர்களுக்கும் கடுமையான சண்டை நடந்தது. வரகுணபாண்டியன் வடக்கே பல்லவர்கள் மீது படையெடுத்து வந்தார்.

இந்தப் போரில் பல்லவருக்கு எதிராகப் பாண்டியர்களுக்கு தோள் கொடுத்தவர்கள் முத்தரையர்கள். பல்லவ அரசரான அபராஜித வர்மனுக்கும், வரகுணபாண்டியனுக்குமிடையே நடந்த போரில் முத்தரையர்கள் கட்சி மாறினார்கள்.

குறுநில மன்னர்களை அழித்தொழிக்காமல் அவர்களை இணைத்து ஒரு மைய அதிகாரத்தை உருவாக்குவதே எந்தவொரு பேரரசின் கொள்கையாக இருக்கும். இந்த உடன்பாட்டுக்கு முத்தரையர்கள் ஊறு விளைவித்தார்கள். அவ்வளவுதான். முத்தரையர்களை ஒழித்துக்கட்டப் பல்லவர்கள் முடிவு செய்தார்கள்.

(தொடரும்)

வாழ்க்கை என்பது அவரவர் வாழ்வதற்கு என்று மட்டுமே எனக் கருதக்கூடாது. மற்றவர்கள் நலனுக்கும் என்றும் கருத வேண்டும். ~பெரியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# பொதுத்தேர்தலின் பின்னர் புரட்சிகரமான வரவு-செலவுத்திட்டம் முன்வைக்கப்படும்

## பந்துல உறுதி

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் பின்னர் புரட்சிகரமான வரவு-செலவுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்படும் என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுபீட்சத்தின் நோக்கு, கொள்கை பிரகடனத்திற்கு அமைய அனைத்துத் துறைகளும் உள்ளடங்கும் விதத்தில் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்படும்.

விவசாயம், கைத்தொழில், சேவைத் துறை மற்றும் ஏனைய துறைகள் தொடர்பில் சுபீட்சத்தின் நோக்குக் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அவற்றை நடைமுறைபபடுத்தும் விதத்தில் வரவு-செலவுத் திட்டம் அமையும்.

ஒவ்வொரு துறைசார் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் புரட்சிகரமான வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுமென அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (ஜ-8)

# தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவருக்கு ஓர் அன்பு மடல்

மரியாதைக்குரிய தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவருக்கு அன்பு வணக்கம்.

நடைபெறப் போகும் பொதுத் தேர்தல் தொடர்பில் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களுக்கு அக்கறை இல்லையென ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கூறியிருந்தீர்கள்.

வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் உண்மையான மனநிலையை வெளிப்படுத்தியமைக்காக முதற்கண் நன்றி கூறிக் கொள்கின்றோம்.

நாடு முழுவதும் தேர்தல் திருவிழாக் கொண்டாட்டத்தில் மூழ்கி இருக்க,

வடக்கு கிழக்குத் தமிழ் மக்கள் தேர்தலில் அக்கறையற்று இருக்கின்றனர் என்ற உண்மையை சிங்கள மக்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

இருந்தும் அந்த உண்மையை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் என்ற பொறுப்பு வாய்ந்த பதவியில் இருக்கும் தாங்கள் வெளிப்படுத்தியதனால், யதார்த்த நிலைமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தவிர, வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் தேர்தலில் அக்கறையற்று இருப்பதற்கான காரணத்தை தங்களுக்குத் தெரியப்படுத்துவதற்காகவே இம்மடலை எழுதுகின்றோம்.

2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்த கொடூரப் போரில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். எங்கும் மரண ஓலம். எங்கும் அவல மரணம். சொந்த நாட்டில் காப்பாற்றுவாரின்றி கொன்றொழிக்கப்பட்ட ஓர் இனத்தின் உளச்சோர்வு எவ்வாறு இருக்கும் என்பது தெரிந்த விடயமே.

இருந்தும் எம் தமிழ் மக்கள் உயிர் இழப்பையும் கடந்து, தேர்தல் அரசியலில் நம்பிக்கை வைத்து தமிழ் மக்களுக்கான அரசியலை உருவாக்கினர்.

கடந்த தேர்தல் காலங்களில் தமிழ் மக்கள் நடந்தும் தவழ்ந்தும் சென்று வாக்களித்தனர். எனினும் முடிவு ஏமாற்றமாகவே இருந்தது.

**சிற்றிசன்** என்ற திரைப்படத்தில் அத்திப்பட்டி மக்கள் யாரை நம்பினரோ அதுபோல தமிழ் மக்கள் யாரை நம்பி வாக்களித்தனரோ அவர்கள் மீது சந்தேகமும் வெறுப்பும் அடையும் அளவுக்கே தமிழ் அரசியல் நிலைமை அமைந்தது.

இங்குதான் நீங்கள் கூறியதுபோல் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் பொதுத் தேர்தல் தொடர்பில் அக்கறையற்றவர்களாக உள்ளனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை அரசாங்கம் முன்வைக்கும் என்ற நம்பிக்கை வீண் போனபோது,

சர்வதேச விசாரணையை தமிழ் அரசியல் தலைமை வலியுறுத்த; அதன்மூலம் எங்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை தவிடுபொடியாகிவிட்டபோது, என்ன செய்வது என்ற மனச்சோர்வே தேர்தல் மீதான அக்கறையின்மைக்குக் காரணமாயிற்று.

இதுவே நிதர்சனமான உண்மை.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** கரணவாய், நாவலர்மடம், தூதாவளை, நெல்லியடி, கரவெட்டி, சக்களாவத்தை, இரும்பு மதவடி, வதிரி, திக்கம், மனோகரா, சித்திவிநாயகர் கோவிலடி பிரதேசம், தேவரையாளி, உடுப்பிட்டி, நெல்லியடி பொலிஸ் நிலையம், நெல்லியடி சந்தை, றூபின்ஸ் வைத்தியசாலை, நெல்லியடி கார்கில்ஸ் பூட்சிற்றி, இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், இலங்கை வங்கி நெல்லியடி, பலாலி வீதி திருநெல்வேலி சந்தியிலிருந்து வேம்படி சந்தி வரை, திருநெல்வேலி, பனிக்கர் லேன், திண்ணை விடுதி, தலங்காவில் பிள்ளையார் கோவில்டி, திருநெல்வேலி கொமர்ஷல் வங்கி, தபால் பெட்டி சந்தி, கந்தர்மடம் சந்தி, இலுப்பையடி சந்தி, சிவன் அம்மன் வீதி, அன்னசத்திர வீதி, ஆரியகுளம் சந்தி, நாவலர் வீதியில் புகையிரத கடவையிலிருந்து அம்பலவாணர் வீதி, அத்தியடி, வீரமாகாளி கோவில், ஆரியகுளம் சந்தியிலிருந்து இராசாவின் தோட்ட சந்தி வரை, கம்பஸ் லேன், தின்னவேலி புறப்பர்ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிற்ரெட், நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், Bright Inn, AVNOR பிறைவேற் லிமிற்ரெட், டம்றோ பலாலி வீதி, IBC தமிழ், BCCAS ஆகிய இடங்களிலும்,

மேலும் **மன்னார் பிரதேசத்தில்** நீலா மடுவிலிருந்து சிலாவத்துறையூடாக அரிப்பு வரை, சிலாவத்துறை கடற் படை முகாம், கொக்குப் படையான், கொண்டாச்சி கிராமம், மறிச்சுக்கட்டி, முள்ளிக்குளம், கரடிக்குழி, பாலக்குழி, முள்ளிக்குளம் கடற்படைமுகாம், சீனத்துறைமுகம், வங்காலை ஒரு பகுதி, முள்ளிபபழம், தள்ளாடி, கட லேரி வீதி, சாந்திபுரம், South bar, தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத் தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய இடங்களில்

மேலும் **மன்னார் பிரதேசத்தில்** சிறுநாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் Palmyrah house, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ஐஸ் தொழிற்சாலை, Palmyrah house கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, New Silk Road, தோட்டவெளி, Timex ஆடைத்தொழிற்சாலை, Industrial Estate, மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட் சிற்றி, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத் தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களில் காலை 6 மணியிலிருந்து மாலை 3 மணிவரையான காலப்பகுதியில் காலையில் இரண்டு மணித்தியாலங்களும் பிற்பகலில் இரண்டு மணித்தியாலங்களும் மின்சாரம் தடைப்படும்.

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் நீடிப்பு

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் மேலும் 4 மாதங்கள் நீடிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

அதன்படி, எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி வரையில் குறித்த ஜனாதிபதி ஆணைக் குழுவின் பதவிக்காலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக ஆராய்வதற்காக 2020 ஜனவரி மாதம் 22 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் குறித்த ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது.

குறித்த ஆணைக் குழுவின் பதவிக்காலம் எதிர்வரும் 16 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் குறித்த காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆணைக் குழுவில் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்ன தலைமை வகிக்கின்றார் என்பதுடன் உறுப்பினர்களில் ஓய்வுபெற்ற மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி தயா சந்திரசிறி ஜெயதிலக மற்றும் ஓய்வு பெற்ற பொலிஸ் ஆய்வாளர் சந்திர பெர்னாண்டோ ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், இடம்பெற்றுவரும் விசாரணைகள் நிறைவடையாதுள்ளமை காரணமாக, அதன் அதிகார காலத்தை நீடிக்குமாறு ஜனாதிபதியிடம் உபாலி அபேரத்ன கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**தீ புகையினால் சூழப்பட்டிருப்பது போன்றும் கண்ணாடி அழுக்கினால் மாசுபடுவது போன்றும் கருவை கர்ப்பப்பை சூழ்ந்திருப்பது போன்றும் இந்த உலகம் ஆசையால் மூடப்பட்டிருக்கிறது. -பகவத்கீதை**

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## மனம் என்ற கடிவாளம்



தவத்தின் விளைவாக ஆற்றல் பிறக்கிறது. பிறருடைய நன்மைக்காகப் பாடுபடுவது தவமாக அமைகிறது. கர்மயோகிகள் வேலைகளையே தவத்தின் ஒரு பகுதியாகக் கொள்கிறார்கள். தவம் செய்வது பிறர் நலத்தை நாடும் உணர்வை அதிகமாக்கி சுயநலம் கருதாத வேலைகளைச் செய்யும்படி செய்கிறது.

பிறருடைய நன்மைக்காகச் செயல்புரிவது, தவம் செய்வதன் சிறந்த பலனான மனத்தூய்மையை அளிக்கிறது. மனத்தூய்மையால் இறைக் காட்சி கிடைக்கிறது.


உடலையும் புலன்களையும் வழிநடத்தும்போது மனம் என்ற கடிவாளத்தை உறுதியாகப் பிடித்து அவை இரண்டும் தாம் விரும்பும்படி செல்லவிடாமல் தடுத்து வைப்பது தவம் ஆகும்.

# ஐக்கிய மக்கள் சக்தி குறைந்தது நூறு ஆசனங்களையாவது பெறும்

## ஹக்கீம் நம்பிக்கை

(கொழும்பு)

**எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி நூறு ஆசனங்களாவது பெறக்கூடிய வாய்ப்பு நிச்சயமாக உள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு வாழைச்சேனையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலும் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாங்கள் புதிய அரசியல் உருவெடுத்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியில் ஆளும் கட்சியில் இருந்து அதிக பெரும்பான்மையானோர் எங்களது கட்சியில் இணைந்துள்ளனர். அதனோடு இணைந்து அனைத்து சிறுபான்மை கட்சிகளும் ஒன்று சேரவுள்ளன.

எதிர்வரும் நாடாளுமன்றத்தில் பச்சை, மஞ்சள் நிறத்திலான ஐக்கிய மக்கள் சக்தி நூறு ஆசனங்களாவது பெறக்கூடிய வாய்ப்பு நிச்சயமாக உள்ளது என்பது எங்களுக்கு பெரிய சந்தோசம். எமது கட்சி நாடு தழுவிய ரீதியில் பலமான இயக்கமாகும். நாங்கள் ஆளும் கட்சி, எதிர்க்கட்சியில் இருந்தாலும் முஸ்லிம்கள் ஆளும் கட்சி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிதான் என்பதை இந்த தேர்தல் உறுதி செய்யும் எனத் தெரிவித்தார். (ஐ-4)

# சிறைக்கைதிகள் தங்குமிடத்தில் தொலைபேசிகள் கண்டுபிடிப்பு

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு சிறைக்கைதிகளின் விடுதிக்கு அருகிலுள்ள கழிவுநீர் வாய்க்காலில் இருந்து 12 கையடக்கத் தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த கழிவுநீர் வாய்க்காலினை சுத்தப்படுத்தும் போதே குறித்த கையடக்க தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனைத் தொடர்ந்து, சிறைச்சாலை ஆணையாளர் ஜெனரல் துஷார உபுல்தெனிய, சிறைசாலையின் அனைத்து பகுதிகளையும் சோதனைக்கு உட்படுத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அதனடிப்படையில் சிறைச்சாலையில் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிறைச்சாலை தகவல்கள் தெரவித்துள்ளன. (ஐ-4)

# பொத்துவிலில் தேர்தல் வன்முறை

## பெண் உட்பட 4 பேர் படுகாயம்

(பொத்துவில்)

பொத்துவில் பிரதேசத்தில் தேர்தல் வன்முறை சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இதில் பெண் உட்பட நான்கு பேர் படுகாயமடைந்தனர்.

குறித்த பகுதியில் பொதுத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சியின் ஆதரவாளர்கள், நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு தாக்கப்பட்டனர்.

இதில் ஒரு பெண் உள்ளடங்கலாக 4 பேர் காயமடைந்த நிலையில் பொத்துவில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் கபே அமைப்பு, பொத்துவில் பகுதியில் வன்முறை அதிக ரிக்கலாம் எனவும் பாதுகாப்பை அதிகரிக்கக் கூறியும் தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# கந்தக்காடு கைதிகளின் உறவினர்கள் 119 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

## இராணுவத் தளபதி தகவல்

(கந்தக்காடு)

கந்தக்காடு புனர்வாழ்வு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள் 119 பேர் தனிமைப் படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளைப் பார்வையிடுவதற்காக கடந்த மார்ச் முதல் ஜூலை மாதம் வரை வருகைதந்த அவர்களின் உறவினர்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன் கொரோனா வைரஸ் மேலும் பரவாமல் தடுக்க, கந்தக்காடு புனர்வாழ்வு மையம் முழுவதும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-4)

# 334 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த 8 ஆம் திகதி நள்ளிரவு முதல் நேற்று முன்தினம் நள்ளிரவு வரையான காலப் பகுதியில் போதைப் பொருள் தொடர்பான குற்றச்சாட்டில் 334 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த காலப் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த 163 பேரும் கஞ்சா போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த 162 பேரும் , ஐஸ் போதைப் பொருளை வைத்திருந்த 9 பேரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-8)

# தேசிய சொத்துக்களை விற்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல

## பிரதமர் கூறுகிறார்

(கொழும்பு)

தேசிய சொத்துக்களை விற்பனை செய்வது தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை அல்ல என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,எதிர்காலப் பரம்பரையினருக்காக தேசிய சொத்துக்களைப் பாதுகாப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

நாட்டின் அபிவிருத்திக்காக தேசிய வளங்கள் பயன்படுத்தப்படும். கடந்த 5 வருடங்களில் நாட்டில் எவ்வித அபிவிருத்தித் திட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை. எனது அரசாங்கம் மேற்கொண்ட அபிவிருத்திகள் கடந்த அரசாங்கத்தில் ஸ்தம்பிக்கப்பட்டன. கொழும்பு-கண்டி அதிவேக நெடுஞ்சாலைப் பணிகள் உரிய வகையில் முன்னெடுக்கப்படவில்லை. கடந்த அரசாங்கம் உரிய கவனம் செலுத்தியிருந்தால் குறித்த திட்டத்தை தற்போது நிறைவு செய்திருக்க முடியும்.

தேசிய வளங்கள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டன. இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் பொது மக்கள் கவனம் செலுத்த வேண்டும். தற்போதைய ஆட்சியில் தேசிய வளங்கள் பாதுகாக்கப்படும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ஐ-8)

# கிலோமீற்றருக்கும் 10 ரூபா மானியம் கோரும் தனியார் பேருந்துகள்

(கொழும்பு)

அரசாங்கத்திடமிருந்து மானியம் கிடைத்தாலே, தனியார் போக்குவரத்துத் துறை நெருக்கடியின்றி செயற்படுமென்று, அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

கொரோனாவிற்கு பின்னரான காலத்தில் தனியார் பேருந்து தொழிற்றுறையை சேர்ந்த சுமார் 6 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தனியார் பேருந்துகளுக்கு ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் 10 ரூபா வீதம் வழங்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

தனியார் பேருந்து உரிமையாளர்கள் தற்போது நாளாந்தம் 1,500 ரூபா இலாபமே ஈட்டுவதாகவும் இதில் 1,000 ரூபா பேருந்து செலவினத்திற்கு சென்று விடுவதாகவும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

## நாகர்கோவிலில்...

னர்.

நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நாகர்கோவில் குடாரப்பு பகுதியிலுள்ள புன்னையடி வைரவர் ஆலயத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று வெள்ளிக்கிழமை பூசை வழிபாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த சமயம் அங்குள்ள மரத்தில் இருந்ததாகக் கூறப்படும் பப்பறவாயன் எனும் குளவி தாக்கியதாக தெரிய வருகிறது.

இதில் 4 பேர் குளவிக்கொட்டுக்கு இலக்கான நிலையில் அம்பன் பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். (ம-3,60)

## சிலாபம் மருத்து...

என்று கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

20 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இறந்த நோயாளியின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட உயிரியல் மாதிரிகளை பி.சி.ஆர் பரிசோதனைக்கு அனுப்பி சிலாபம் வைத்தியசாலை நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், முடிவுகள் கிடைக்கும் வரை தற்போது முந்தல் மருத்துவமனையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மருத்துவமனையை விட்டு வெளியேற வேண்டாம் என்று அதன் பணிப்பாளர் மருத்துவர் மகாலிங்கம் பாஸ்கரன் அறிவுறுத்தியுள்ளார். (ம-3)

## கொரோனா...

தப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்துக்குச் சென்று வந்த நால்வரின் குடும்பங்களே இவ்வாறு சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-3,18)

## யாழில் 4 குடும்...

சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு திரும்பிய ஒருவர் பழகிய குடும்பங்களே இவ்வாறு சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் சிலர் தேடப்பட்டு வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

"யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இரண்டு குடும்பங்களும் கோப்பாய், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் தலா ஒரு குடும்பமும் என 4 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், மன்னார் மாவட்டத்தில் 14 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு திரும்பியவர் மீள அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

அவர் பழகிய மேலும் சில குடும்பங்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன" என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,18)

## தேர்தல் மீண்டும்...

கொரோனா வைரஸின் பரவல் அதிகரித்ததன் காரணமாக பொதுத் தேர்தல் நடத்துவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே தேர்தலை மீண்டும் ஒத்திவைப்பது தொடர்பில் கலந்துரையாடுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## நல்லூர் மஹோற்...

இந்நிலையில் உற்சவம் இடம்பெறுமென்பதை ஆலய நிர்வாகத்தினர் உறுதிப்படுத்தியுள்ளதாகவும், ஆலயத்திற்கு உள்ளே அர்ச்சகர்கள், ஆலய நிர்வாகிகள், பக்தர்கள் உள்ளடங்கலாக 50 பேர் மாத்திரம் நிற்பதற்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் த.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபையின் அமர்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாநகர சபையின் பதில் முதல்வர் து. ஈசன் தலைமையில் இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா நோய்த் தொற்றினைத் தொடர்ந்து தற்போதுள்ள சுகாதார நடைமுறைகளுக்கமைய எங்களுடைய சுகாதார வைத்திய அதிகாரி சில விடயங்களைத் தெளிவாகத் தெரியப்படுத்தியுள்ளார்.

அந்தவகையில் இம்முறை மஹோற்சவ காலப் பகுதியில் தூக்கு காவடி, காவடி, அங்கப் பிரதட்சணை, அன்னதானங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் போன்ற செயற்பாடுகளை உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ள முடியாதென்பதால் அவற்றிக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஆலயத்திற்குள் இடம்பெறும் உற்சவ நிகழ்வுகள் தொடர்பில் ஆலய நிர்வாகம் கவனம் செலுத்தும். எனினும், உற்சவ காலத்தில் ஆலயத்திற்கு வெளியே இடம்பெறும் செயற்பாடுகளுக்கு யாழ். மாநகர சபையும், பாதுகாப்புப் பிரிவினருமே பொறுப்பாளிகள்.

அண்மையில் இடம்பெற்ற மடு உற்சவத்தில் கலந்து கொள்ள 1000 பேர் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டார்கள். அவ்வாறானதொரு சூழல் ஏற்படும் பட்சத்தில் நாங்கள் நிபந்தனைகளுடன் கூடிய சுகாதாரத் தளர்வுகளை எம்மால் ஏற்படுத்த முடியும்.

கடைகள் அமைக்கப்படுவதற்கு மாநகர சபையே பொறுப்புக்கூற வேண்டியுள்ளது. எனவே, இந்த விடயத்தையும் நாங்கள் உடனடியாக ஊக்கப்படுத்த முடியாது. சுகாதாரரீதியான தளர்வுகள் ஏற்படுவதுடன், பொதுமக்கள் அனுமதிக்கப்படும் பட்சத்தில் இதுதொடர்பில் எம்மால் முடிவெடுக்க முடியும். எனினும், சில அடிப்படையான வேலைத் திட்டங்களை யாழ். மாநகர சபை செய்ய வேண்டித்தானிருக்கிறது.

ஒவ்வொரு வருடமும் நல்லூர் முருகன் உற்சவத்தால் யாழ்.மாநகரசபை இலாபத்தைச் சந்தித்துள்ளது. எனினும், இந்த வருடம் சுகாதாரக் கட்டுப்பாடுகளால் வழமையான வருமானம் இல்லாமல் போகக் கூடிய சூழலே நிலவுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,18)

## நாடு மீண்டும்...

நேற்று ஊடகங்களுக்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

கந்தக்காடு புனர்வாழ்வு மையத்திலிருந்த போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு நடத்தப்பட்ட 375 பேரின் பி.சி.ஆர் பரிசோதனைகளின் முடிவுகள் தற்போது கிடைக்கப் பெற்றிருப்பதாகவும், அதில் 300 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கந்தக்காடு புனர்வாழ்வு மையம் மற்றும் கந்தக்காடு தனிமைப்படுத்தல் நிலையம் உள்ளடங்கலாக 1150 பேருக்கு கொரோனா தொற்று பரிசோதனைகள் முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் கொரோனா தொற்றுக்குள்ளான நோயாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரிக்கக்கூடிய சாத்தியப்பாடு இருப்பதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு குறித்த காலப்பகுதியில் கந்தக்காடு புனர்வாழ்வு மையத்தில் புனர்வாழ்வு செயற்றிட்டத்தை முடித்துக் கொண்டு வெளியேறிச் சென்றவர்கள் மற்றும் அங்கிருப்பவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களையும் இனங்கண்டு அவர்களுக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன், இதனூடாக கொரோனா வைரஸ் சமூகப் பரவல் ஏற்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ம-3)

## தொற்றாளர்...

பரிசோதனை முடிவுகள் மட்டுமே இதுவரையில் கிடைத்துள்ளதாக இராணுவ தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

குறித்த இரு புனர்வாழ்வு மத்திய நிலையங்களிலும் அதிகாரிகள் உட்பட 1150 பேர் இருப்பதாகவும் ஏனைய பரிசோதனை முடிவுகள் இன்று கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் இனங்காணப்பட்ட தொற்றாளர்களில் எண்ணிக்கையின் அடிப்படையில் மேலும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## நேற்...

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2454 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## வெலி...

திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 454 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

### தன நிதானய
திகதி - 10.07.2020
சீட்டிழுப்பு இலக்கம் - 288
ஆங்கில எழுத்து: Q — வெற்றி இலக்கங்கள்: 19 26 33 38

### நீரோகா
திகதி 10/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0685
லக்கினம்: தனுசு — வெற்றி இலக்கங்கள்: 32 44 52 72

### மெகா பவர்
திகதி 10/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 546
I 04 — வெற்றி இலக்கங்கள்: 07 73 74 78

### மஹஜன சம்பத
திகதி 2020/07/10
சீட்டிழுப்பு இலக்கம் 4179
ஆங்கில எழுத்து: X — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 2 5 3 8 0 0

### கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 10-07-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2474
ஆங்கில எழுத்து: C — வெற்றி இலக்கங்கள்: 07 08 57 64

### உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 348 — திகதி 10.07.2020 — வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து: K — வெற்றி இலக்கங்கள்: 02 46 66 — விதி எண்: 5
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 55,274,992
தொ.பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

### ராசி
வெற்றி வாரம் 2857 — வர்ணம் கருநீலம் — திகதி 10.07.2020
வெற்றி இலக்கங்கள்: 06 23 32 45 — சிம்மம்
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ.2,000,000
தொ.பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

### அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 976
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2020.07.10
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,876,600/-
வெற்றி இலக்கங்கள்: 10 21 38 40 — ஆங்கில எழுத்து: S

### ஜய
595 — 10.07 2020
K 66 67 70 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,023,495
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk


## 20 ரூபாயில் 1 இலட்சம் வெல்லப்பட்டுள்ளது

கடந்த 2020.07.09ம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட NLBயின் 'மெகாபவர்' (சீ.இல.0545) சீட்டிழுப்பில் 3 இலக்கங்களும் ஆங்கில எழுத்தும் பொருந்தியதில் ஒரு இலட்சம் ரூபாய் வெல்லப்பட்டுள்ளது.

குமாரு பூபாலசிங்கம்
பிரதான விற்பனை முகவர், பருத்தித்துறை. (N-220061)
(3260)

# வவுனியாவில் பெரமுன ஆதரவாளர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா சுந்தரபுரம் பகுதியில் பொது ஜன பெரமுன கட்சியின் ஆதரவாளர் ஒருவர் நேற்று இரவு கிணற்றிலிருந்து சடலமாக மீ ட்கப்பட்டுள்ளார்.

வவுனியா சுந்தபுரம் பகுதியில் இடம் பெற்ற சடங்கு நிகழ்வு ஒன்றில் குறித்த நபர் கலந்து கொண்டுள்ளார். இரவு 9.00 மணியளவில் அவரைக் காணவில்லை யென தேடிய சமயத்தில் ச டங்கு நிகழ்வு இடம்பெற்ற வீட்டில் காணப்படும் கி ணற்றி லிருந்து ச டலமாக மீ ட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் சுந்தரபுரம் பகுதியினை சேர்ந்த பொதுஜன பெரமுன கட்சியின் வன்னி தேர்தல் தொகுதி வேட்பாளர் ஜனக்க நந்தகுமார அவர்களின் ஆதரவாளர் ஆகிய 34 வயதுடைய நித்தியானந்தம் என்ற நபரா வார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட நபரின் தலையின் பின் பகுதியிலிருந்து இரத்தம் வந்துள்ளமையினால் இச்சம்பவம் கொ லையாக இருக்கலாம் என உயிரிழந்த நபரின் உறவினர்கள் சந்தேகம் வெளி யிட்டுள்ளனர். (ம-03)

# ஐ.தே.கட்சியைச் சேர்ந்த இரண்டு வேட்பாளர்கள் பெரமுனவுடன் இணைவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த இரு வேட்பாளர்கள் பொதுஜன பெரமுனவுடன் இணைந்துள்ளனர்.

பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட அபேட்சகர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் அபேட்சகராக போட்டி யிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்ட சந்தன பிரியந்த மற்றும் எஸ்.டபிள்யு.பிரேமரத்ன ஆகியோரே பொதுஜன பெரமுனவில் இணைந்துள்ளதாக குறித்த கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரையும் ஆதரிப்பதற்கு, பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன இதன் போது தெரிவித்துள்ளார். (ம-03)


## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படும் UK Based Fast Food Outer க்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

- உதவிக் கணக்காளர் Assistant Accountant ( Male / Female )
- காசாளர் ( பெண் ) Cashier ( Female )
- பணிக்குழு உறுப்பினர் Crew Member ( Male / Female )

- அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.
- உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

தங்களது சுயவிபரக் கோவையை 15.07.2020 ற்கு முன்னர் நேரில் அல்லது கீழ்க்காணும் முகவரிக்கு / மின்னஞ்சலிற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தொடர்புகளிற்கு :- 077 769 6443

tilko.tilak@gmail.com
Kabris Kingdom,
Main Street, Jaffna.
(C-9871)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org



(3243)

021 222 8093 புதிய விலாசம் No.17, Kandy Road, Jaffna.

## கணிதபாட வகுப்புக்கள்

Lock down காலகட்டத்தில் 4 மாதங்கள் செயல ற்று இருந்த கல்வி நடவடிக்கையை துரிதமாக மீட்டலின் பொருட்டும், க.பொ.த.சா/த மற்றும் தவணைப் பரீட்சைகளைக் கருத்தில் கொண்டு தரம் 6-11 வரையான மாணவர்களுக்கு கணித பாடம் தனியாகவோ, குழுவாகவோ வீடு வந்து கற்பிக்கப்படும். (3264)

(கடந்த கால வினாப்பத்திரங்கள், மீட்டற் பயிற்சிகள், மாதிரி வினாப்பத்திரங்கள் வழங்கப்படும்.)

தொடர்புகளுக்கு : 075 777 7166 யாழ்ப்பாணம்

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## விற்பனைக்கு

கண்டக்கல் ( சுண்ணாம்பு ) மற்றும் கட்டிட அத்திபாரக்கல் விற்பனைக்குண்டு. (3265)

தொடர்பு : 077 677 0474

## வேலை வாய்ப்பு

யாழ். நகரில் இயங்கும் புடவை நிறுவனம் ஒன்றிற்கு ஆண்/ பெண் வேலையாட்கள் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். (C-9872)

தொடர்புக்கு - 077 855 4840

## PERSONAL GROUP CLASS

இரசாயனவியல் (A/L) 2020, 2021, 2022, Repeat Batch கடந்த கால Past Papers கற்பிக்கப்படும். (3266)

சி. அங்கதன் B.sc (Chem. Spl)

தொடர்பு : 075 436 4510

## வேலையாட்கள் தேவை

பளையில் இயங்கும் சிறு கைத்தொழிலகத்திற்கு தச்சு வேலை ஆட்கள் தேவை.

மற்றும் விளக்குமாறு, அகப்பை, திருவுபலகை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.



தொடர்பு:- 077 210 5286 077 559 1778 (3265)

## வேலையாட்கள் உடன் தேவை

யாழ்.மாவட்டம் (ஆண், பெண்)

வேலை விபரம் நேரில் பேசப்படும்

தொடர்பு:- 077 310 1462 (3263)

## இலங்கை விசா நீடிப்பு

வெளிநாட்டிலிருந்து இலங்கை வருவோருக்கான இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION (வீசா நீடிப்பு)
FOR FOREIGN PASSPORT

எமது கிளைகள்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி |
| நெல்லியடி | கொடிகாமம் |
| புதுக்குடியிருப்பு | சுன்னாகம் |
| மருதங்கேணி | பருத்தித்துறை |
| சாவகச்சேரி | திருகோணமலை |
| மாணிப்பாய் | வல்வெட்டித்துறை |



(C-9624)

V2 TRAVELS 0768227499

## விக்னா

கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

O/L Day Class ( 8.00 to 2.00 )

புதிய பிரிவினருக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (C-9866)

T.P : 076 482 4490

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 27 - 09 - 1948



உதிர்வு 12 - 06 - 2020

அமரர்

### வீரகத்தி சேந்தன்

[ பொறியியலாளர்,
SKYLARK ENGINEERS AND CONSTRUCTORS
நிறுவுனர் ]

கடந்த 12.06.2020ஆம் திகதி அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவர், வீரகத்தி சேந்தன் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் , மலர் வளையம், மின்னஞ்சல், தொலைபேசி போன்ற பல்வேறு ஊடகங்கள் வாயிலாக எமது துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், பல்வேறு வகையில் இறுதி நிகழ்வில் உதவி புரிந்தவர்களுக்கும், எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (12.07.2020) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு வேண்டுகின்றோம். (3155)

பெரியதோட்டம், கரவெட்டி மத்தி, கரவெட்டி.

தகவல் :- குடும்பத்தினர் +3164 7016 375 , 077 206 1425

## மகுடம்

பலாலி வீதி, உரும்பிராய்

A/L 2022

| | |
|---|---|
| தமிழ் | - B.பத்மநாதன் |
| இந்து நாகரிகம் | - T.ஸ்ரீஸ் |
| புவியியல் | - S.சபரிதன் |
| வரலாறு | - T.தனுஷன் |
| அளவையியல் | - S.பவன் |
| அரசறிவியல் | - V.நிஷாந்தன் |
| மனைப்பொருளியல் | - S.விக்கினேஸ்வரன் |
| விவசாயம் | - B.பாலசுதன் |
| நாடகம் | - K.சந்திரன் |
| சித்திரம் | - S.விஜயாலயன் |

(3268)

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

தொடர்பு :- 077 486 0667

## விமலம் திருமண சேவை

புத்தூர் கிழக்கு, புத்தூர்

மணமகள் தேவை

- வயது 35, பரணி, லண்டன், பாவம் 27, சூரி + செவ் 05ல்
- வயது 30, அச்சுவினி, லண்டன், பாவம் 34, செவ் 01 ல் Mechanical Engineer
- வயது 32, சதயம், U.S.A, பாவம் 45 1/2 செவ்வாய் 07ல் ( B.sc., M.sc. Consultant Technician )
- வயது 29, B.B.A பட்டதாரி ( இலங்கை ) கேட்டை, சூரி + செவ் 03ல், பாவம் 18
- வயது 31, கேட்டை, பாவம் 62, செவ்வாய் 02ல், சிங்கப்பூர் இஞ்சினியர்.

அனைவருக்கும் இலங்கையில் மணமகளை எதிர்பார்க்கின்றார்கள்.

மணமகன் தேவை

- வயது 31, சித்திரை, பாவம் 62, சூரி + செவ் லக்கினத்தில்
- வயது 30, சதயம், பாவம் 60, சூரி + செவ் வாய் 07ல்
- வயது 28, மூலம், பாவம் 20, பட்டதாரி
- வயது 22, பூசம், பாவம் 37, செவ்வாய் 07ல்
- வயது 22, சித்திரை 01, பாவம் 18, லக்கின த்தில் செவ்வாய்

(3258)

அனைவருக்கும் வெளிநாட்டு மண மகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்

076 324 6309 , 077 324 8537


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.